# இந்து விழிகள்

## உயர்தர மாணவர் ஒன்றியம்
## 2013



### யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
### பருத்தித்துறை.

# இந்து விழிகள்

# 2013

*இதழாசிரியர்*

செல்வி.சி.சிவதர்சிகா

## உயர்தர மாணவர் ஒன்றியம்

## இதழ் - 05

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,

பருத்தித்துறை.

| | | |
|---|---|---|
| நூல் | : | **"இந்து விழிகள்"** |
| வெளியீடு | : | உயர்தர மாணவர் ஒன்றியம்<br>யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,<br>பருத்தித்துறை. |
| பதிப்பு | : | ஆனி 2013 |
| இதழாசிரியர் | : | செல்வி.சி.சிவதர்சிகா |
| பதிப்பகம் | : | **S.P.M.**ஓவ்செற் பிறின்ரேர்ஸ்,<br>வி.எம்.றோட், பருத்தித்துறை<br>தொ.பே : 0774966997 |

| | | |
|---|---|---|
| Title | : | **INTHUVILIKAL** |
| Published by | : | Advanced Level Union<br>J/Vadamaradchy Hindu Girls' College,<br>Point Pedro. |
| Published to | : | June 2013 |
| Edition | : | Miss.S.Sivatharsiga |
| Printers | : | **S.P.M.**Offset Printers,<br>V.M.Road, Point Pedro.<br>T.P : 0774966997 , 021 226 0055 |

# கல்லூரிக் கீதம்

**ராகம் - ஆரபி** **தாளம் - ஆதி**

**பல்லவி**

*வட இந்து மங்கையர் கல்லூரி*
*வாழிய வாழி நீடூழி.* *(வட)*

**அனுபல்லவி**

*ஆழி யிறைவன் அருள்நிதம் பாடி*
*பாழ்வினை யகலப் பரிவுடன் பயிலும்* *(வட)*

**சரணம்**

*ஈழநன் நாடாம் எங்கள் பொன்னாட்டில்*
*திருவளர்ந் தோங்கிடும் பருத்தித்துறையாம்*
*தாழ்விலாத் தலத்தில் தவநெறிச் சங்கம்*
*தமிழ்மகள் மாண்புறத் தரணியி லருளிய* *(வட)*

*செந்தமிழ் முதலாஞ் சிறந்த நற்கலையும்*
*சிந்தையை யேற்றும் நந்திரு மறையும்*
*எந்தத் துறையிலும் தேர்ந்திடப் பயிற்சி*
*தந்திடும் தர்மம் தனதெனச் சாற்றும்* *(வட)*

*மங்கையர் பண்பும் இங்குநாம் பயின்று*
*நங்குலம் தழைக்க நாடும் செழிக்கப்*
*பொங்கிடு மன்பும் மங்கிடா வீரமும்*
*எங்கணும் சேவைகள் செய்திட வளரும்* *(வட)*

*பன்னரும் பெருமைசேர் பரந்தநல் விண்ணே*
*பரிதியும் மதியு மின்றேல் இருட்புண்ணே*
*அன்பெனும் நிலவைப் பொழிபவள் பெண்ணே*
*இன்பக் கதிரொளி காட்டிடுங் கண்ணே*
*நன்மணி விளக்கே மாற்றுயர் பொன்னே*
*மன்னுயிர் சேவையை தன்னுயிரென்னும்* *(வட)*

*ஆக்கம் : 1954*
ஆக்கியோன் : திருமதி.கமலா பெரியதம்பி
*(முன்னாள் ஆசிரியை)*

## மகுட வாசகம் School Motto

*"உன்னையே நீ அறிவாய்"*
"Know Thy Self"

## தூரநோக்கு Vision

*"வடமராட்சிப் பிரதேசத்தில் சைவப் பாரம்பரியத்தை பேணிப் பாதுகாக்கும் உயர் நிலைக் கல்லூரியாகத் திகழ்தல்"*

## நிறுவனப் பணிக்கூற்று Mission

*"மாறிவரும் உலகில் சவால்களை எதிர்நோக்கக் கூடிய சிந்தனை ஆற்றலும், செயற்திறனும், ஆளுமையும் கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்கும் ஆசிரியர்களின் ஆளுமையை வளர்ப்பதற்கு சமூகத்துடன் இணைந்து பௌதீக வளங்களைப் பயன்படுத்தி வினைத்திறன் மிக்க செயற்பாட்டை உருவாக்கல்."*

# யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
# உயர்தர மாணவர் ஒன்றியத்தின்

# மலர் வெளியீட்டுக் குழு – 2013

| | | |
|---|---|---|
| **காப்பாளர்** | : | அதிபர் – திருமதி.தே.நவரட்ணம் |
| **உபகாப்பாளர்** | : | பிரதி அதிபர் – திருமதி.செ.ஜெகநாதன் |
| **முகாமைத்துவக் குழு உறுப்பினர்** | : | திருமதி.ப.ஜெயராசன்<br>திரு.K.தவயோகநாதன்<br>திருமதி.S.வேணுகோபாலவாணிதாசன்<br>திருமதி.P.ஸ்ரீநாதன்<br>திருமதி.இ.விவேகானந்தன்<br>திருமதி.தே.அருமச்சந்திரன் |
| **பொறுப்பாசிரியர்கள்** | : | திருமதி.அ.சுந்தரமூர்த்தி<br>திருமதி.அ.தவராசா<br>திருமதி.ஸ்ரீ.கிருஸ்ணஜோதி<br>திருமதி.க.கனகசபாவதி<br>திருமதி.அ.சிறீதரன் |
| **தலைவர்** | : | செல்வி.இ.கலைவாணி |
| **உபதலைவர்** | : | செல்வி.ம.சாருஜா |
| **செயலாளர்** | : | செல்வி.சு.சுவர்ணா |
| **உபசெயலாளர்** | : | செல்வி.இ.சத்தியா |
| **பொருளாளர்** | : | செல்வி.இ.விதுரா |
| **இதழாசிரியர்** | : | செல்வி.சி.சிவதர்சிகா |
| **வெளியீட்டுக்குழு** | : | செல்வி.ப.துவாரகா<br>செல்வி.க.கீதாஞ்சனா<br>செல்வி.ம.றொசன்ஜா<br>செல்வி.நா.துசிகா<br>செல்வி.கி.சுவஸ்திகா<br>செல்வி.யோ.சுவைதா |

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/வட இந்து மகளிர் கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் "இந்து விழிகள் - இதழ் 5" ற்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

சைவப் பாரம்பரியத்தையும், தமிழ்க்கலாச்சாரத்தையும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இக்கல்லூரி இன்றும் தனது இலக்குடன் செயலாற்றி வருவது சிறப்பானதாகும்.

எதிர்கால, நிகழ்கால உலகுக்கு ஏற்ற மாணவ சமுதாயத்தை உருவாக்குகின்ற தூரநோக்குடன் செயலாற்றி வருகின்ற இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

வடமராட்சி வலயத்தில் கல்விப் பெறுபேற்றிலும், இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சாதனை படைத்து முன்னிலை பெற்றுவரும் பாடசாலைகளில் இக்கல்லூரியும் முதன்மை பெற்று விளங்குவது சிறப்பானதாகும்.


நல்லொழுக்கமுள்ள, நண்பண்புகளை வளர்க்கின்ற நற்சிந்தனை மாற்றங்களை ஏற்றுக் கொள்கின்ற மாணவ சமுதாயம் வளர்க்கப்படுகின்ற போதே வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் பேணிப் பாதுகாக்கப்படும்.

இன்று வெளிவருகின்ற "இந்து விழிகள் - இதழ் 5" மாணவர் ஆக்கங்களை உள்வாங்கி உயர்தர மாணவ மன்றத்தின் அயரா முயற்சியால் வெளியிடப்படுவது பாராட்டுக்குரியது.

உங்கள் அறிவுத்தேடல் தொடர்வதற்கும் எதிர்காலம் சிறப்பாக அமையவும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**திரு. சி. நந்தகுமார்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வடமராட்சி.

# கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியம் வெளியிடும் "இந்து விழிகள்" சஞ்சிகைக்கு ஆசி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

பாடசாலையில் கல்வி பயிலும் காலத்தில் மாணவர் தமது அறிவு, திறன் ஆகியவற்றை வெளிக் கொணருவதற்கு பாடசாலைச் சஞ்சிகைகள் பெரும் பங்காற்றுகின்றன. இந்த வகையில் இந்து விழிகள் சஞ்சிகையும் அமைகின்றது. இச் சஞ்சிகையில் மாணவர் ஆக்கங்களும், ஆசிரியர் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் எழுதிய மாணவர் எதிர்காலத்தில் எழுத்தாற்றல் மிகுந்தவர்களாக வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் இந்து விழிகள் சஞ்சிகையை வெளியிடும் உயர்தர மாணவர் பாராட்டுக்குரியவர்களாவர். இச் சஞ்சிகை தொடர்ந்து ஆண்டு தோறும் வெளிவரவேண்டும் என எனது மனமுவந்த நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. ச. ஸ்ரீராமச்சந்திரன்**
கோட்டகல்விப் பணிப்பாளர்,
பருத்தித்துறை.



# அதிபரின் ஆசிச்செய்தி



யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் ஐந்தாவது இதழாம் "இந்து விழிகள்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது கல்லூரியின் உயர்தர மாணவர்கள் துறைசார் ரீதியில் தற்போது பல்கிப் பெருகிக் காணப்படுவது கல்லூரியின் வளர்ச்சியைப் பறைசாற்றுகின்றது. அது மாத்திரமன்றி எமது மாணவிகள் நாட்டின் பல பல்கலைக்கழகங்களில் தமது கற்கை நெறிகளைத் தேர்ந்தெடுத்து கற்றுக் கொண்டிருக்கிறார்கள். பலர் வெளியேறி உயர் வேலைகளை அலங்கரித்தும் கொண்டிருக்கிறார்கள். இவை எல்லாவற்றுக்கும் காரணம் மாணவிகள் சரியான முறையில் ஆசான்களால் வழிப்படுத்தப்பட்டு சுய தேடல் , சுயகற்றலுக்கு உட்படுத்தப்பட்டமையே ஆகும்.

இந்த வரிசையில் எம் மாணவிகளின் தேடலின் ஒரு அங்கமான செயற்பாடே 'இந்து விழிகள்' சஞ்சிகை ஆகும். க.பொ.த.உயர் தர பரீட்சையில் பல சாதனைகளை நிலைநாட்டத் துடித்துக் கொண்டிருக்கும் இம் மாணவச் செல்வங்கள் இரவு பகல் விழித்திருந்து இந்து விழிகள் சஞ்சிகையை உருவாக்கியுள்ளனர்.

விரைந்து மாறிவரும் கலைத்திட்டத்திற்கேற்ப தம்மையும் உள்வாங்கி இயைபுடைய செயற்பாடுகளை செய்யத் துடிக்கும் இளசுகளின் செயற்பாடுகள் எல்லோராலும் வரவேற்கத்தக்கதும் பாராட்டத் தக்கதுமாகும்.

பாடசாலை வாழ்வு நிலைத்திருக்கும் வரையும் இந்து விழிகள் அவர்கள் கதை சொல்லிக் கொண்டிருக்கும். மாணவர்களின் ஒவ்வொரு ஆக்கமும் அரும் பொக்கிசங்களாக அமைந்து அவர் பெருமை கூறும். இச் செயற்பாடு மாணவர் தம் உள்ளார்ந்த ஆற்றல் திறன் என்பவற்றின் வெளிப்பாடாகும்.

இச்சஞ்சிகை பாடசாலையின் புகழ்பேசும் வகையில் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என வாழ்த்தி இச் சஞ்சிகைக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய அனைத்து உள்ளங்கட்கும் நன்றி கூறி எனது ஆசிச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**திருமதி. தே. நவரத்தினம்**
அதிபர்

# பிரதி அதிபரின் வாழ்த்துரை



யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வெளியீடான "இந்து விழிகள்" ஐந்தாவதுமலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.


இன்று கல்வி என்பது பரந்துபட்ட ஒன்றாகி விட்டது. தகவல் தொழில் நுட்பத்தின் துரித வளர்ச்சியினால் அறிவின் பல்வேறு பரிமாணங்களைத் தேடுகின்ற வசதி மாணவருக்குக் கிடைத்துள்ளது.

க.பொ.த உயர்தர மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்கள், திறன்கள் தேடல்களை வெளிக்கொணரும் வடிகாலாக இச் சஞ்சிகை அமைந்துள்ளது.

இம்மலரை வெளியிட ஊக்கமளித்த அதிபர் அவர்களையும் மாணவர்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்த பொறுப்பாசிரியர் மற்றும் துறை சார்ந்த ஆசிரியர்கள் யாவரையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுகின்றேன்.

இம்மலரானது வருடாவருடம் தொடர்ந்து பல அரிய தகவல்கள் ஆக்கங்களைக் கொண்டு வெளிவர இறைவனை வேண்டுவதுடன் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. செ. ஜெகநாதன்**
பிரதி அதிபர்



# மன்றப் பொறுப்பாசிரியர் சிந்தனையில் இருந்து..




யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் பெருமுயற்சியினால் "இந்து விழிகள்" எனும் சஞ்சிகையின் இதழ் ஐந்து வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தற்கால உலகின் சவால்களை வெற்றிகொள்ளும் மாணவர் பரம்பரையொன்றை உருவாக்கும் பாரிய பணி எமக்குள்ளது. இந்த வகையில் இவ்வாறான சஞ்சிகை வெளியீடு மாணவரை நூல் உசாவுகை, இணையப்பயன்பாடு முதலான தேடல்களின்பால் இட்டுச் செல்லத் தக்கவாறு கற்றல் வாய்ப்புக்களை உருவாக்குவதோடு மாணவர்களின் சிந்தனையாற்றல், தனித்துவம், தேடல் , ஆளுமை விருத்திக்கும் அத்திவாரமாக அமையும்.

எனவே மலரானது மாணவர்களின் திறன்கள் ஆற்றல்களை வெளிக் கொணர்வதற்கு ஊடகமாக அமைந்துள்ளது. அந்த வகையில் சஞ்சிகை வெளியீட்டிற்கு வழிகாட்டிகளாக இருந்த பொறுப்பாசிரியர்கள் மெருகூட்டிய மாணவர்கள் அனைவருக்கும் நன்றி கூறி எதிர்காலத்தில் இந்து விழிகள் சிறப்புடன் வெளிவர இறையாசி வேண்டி நிறைவு செய்கின்றேன்.

**திருமதி. க. கனகசபாபதி**
மன்றப் பொறுப்பாசிரயர்



# தலைவரின் இதயத்திலிருந்து....



யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் வெளியிடப்படும் "இந்து விழிகள்" எனும் ஐந்தாவது இதழ் தங்கள் விழிகளிற்கு விருந்தாகுவதையிட்டு பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

எமது மாணவர்களின் சுய ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் இவ்விதழானது மாணவர்களின் அறிவுத் தேடலைப் பறை சாற்றுகின்றது.

கடந்தகால உயர்தர மாணவர் மன்றத்தினர் வெளியிட்ட இந்து விழிகளைத் தொடர்ந்து இவ்விதழின் ஐந்தாவது வெளியீடானது மாணவர்களின் தேவையை முடிந்தவரை தீர்த்து வைப்பதுடன் இனிவரும் காலங்களில் வெளியாகும் இந்து விழிகள் புதுப்பொலிவு பெற்று பல் பரிமாணங்களுடன் வெளிவரும் என்பதில் ஐயம் எதுவும் இல்லை.

இம் மலரினை வெளியிடுவதற்கு அருள்பாலித்த இறைவனுக்கும், ஆக்கமும் ஊக்கமும் தந்த எமது கல்லூரியின் அதிபருக்கும், பிரதி அதிபருக்கும், மன்றப் பொறுப்பாசிரியருக்கும் ஏனைய ஆசிரியப் பெருந்தகைகட்கும், ஒற்றுமையுடன் செயற்பட்ட உயர்தர மாணவர்களுக்கும், மலர் சிறப்பாக வெளிவருவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இ. கலைவாணி**
12 கலைப்பிரிவு (2014)



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து....



எமது கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தால் வருடம்தோறும் வெளியிடப்படும் "இந்து விழிகள்" எனும் சஞ்சிகையின் 5வது இதழானது இறை ஆசியினால் இவ்வருடமும் புதுப்பொலிவுடன் வெளியிடப்பட்டிருப்பதையிட்டுப் பெருமகிழ் வடைகின்றேன்.

போட்டி நிறைந்த இன்றைய காலகட்டத்தில் எமது மாணவியரின் தனித்திறமைகள் மற்றும் உள்ளார்ந்த ஆற்றல்களினை எழுத்துருமூலமாக வெளிக்காட்டுவதற்கு சிறந்த ஊடகமாக அமைகின்ற இச் சஞ்சிகையானது அவர்தம் ஆற்றலை வெளிப்படுத்துவதோடு அனைவரினதும் அறிவுத் தேடலிற்கு விடைகூறும் பொக்கிஷமாகவும் அமையுமென நம்புகிறேன்.

அத்துடன் இச்சஞ்சிகையில் ஏதேனும் சொற்பிழைகள், பொருட் பிழைகள் காணப்படின் அவற்றினை மன்னித்துக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

மேலும் வருடம்தோறும் இச்சஞ்சிகையினை சிறப்பாக வெளியிடுவதற்கு எதிர்கால உயர்தர மாணவர்கள் முன்வர வேண்டுமெனவும், அதற்கு எந்நேரமும் உதவிகள் வழங்கத் தயாராக உள்ளோம் எனவும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக இச் சஞ்சிகையினை சிறப்புற வெளியிடுவதற்கு உதவிய அனைத்து அன்புள்ளங்களிற்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி. சிவதர்சிகா**
உயிரியல் (2014)




# எமது அதிபர்

## திருமதி.தே.நவரட்ணம்

**B.Ed, S.L.P.S -2 -II**




பிரதி அதிபர்

திருமதி.செ.ஜெகநாதன்

**B.A (Hons). Dip.In.Edu.**



எமது பாடசாலையின்
அதிபர், ஆசிரியர்கள்



மலர்க்குழு

# இதழின் உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| 01) | கல்லூரிக் காலங்கள் | 01 |
| 02) | அனைவருக்கும் கல்வி | 02 |
| 03) | The Story of mother's Day | 04 |
| 04) | இலட்சியம் | 05 |
| 05) | விடாமுயற்சி | 06 |
| 06) | குடும்பத்தைப் பாதுகாப்பவளை மேம்படுத்துவோம் | 12 |
| 07) | Poetry | 14 |
| 08) | மீண்டும் அரங்கேறும் பாஞ்சாலி சபதம் | 15 |
| 09) | தெய்வீக தேன் அமிர்தம் | 17 |
| 10) | கல்வியே உனக்காக | 18 |
| 11) | இன்சொல் இனிது | 19 |
| 12) | நெப்போலியன் பொனபார்ட் | 21 |
| 13) | மானிட வாழ்க்கை | 26 |
| 14) | Computer Virus | 27 |
| 15) | குறுக்கெழுத்து | 28 |
| 16) | விலங்குடைத்த பாரதி | 30 |
| 17) | International Marketing Introduction | 32 |
| 18) | அமெரிக்கப் பாலைவனம் ஒன்றில் ஒளி ஊடுருவும் மர்மப்பொருள் | 35 |
| 19) | தரணியில் தலை மகளாகு | 36 |
| 20) | லீப் வருடம் | 37 |
| 21) | மர்மக்கடல் பெர்மியூடா | 38 |
| 22) | Here is another love story behind Tajmahal | 40 |
| 23) | விஞ்ஞான உலகமிது | 41 |
| 24) | An analysis of an organizations environment | 42 |
| 25) | தொலைவிலுள்ள நட்பு | 45 |
| 26) | "Friend ship" - As books | 46 |
| 27) | போற்றப்பட வேண்டிய பெண் | 47 |
| 28) | மழை நாள் நினைவுகள் | 48 |
| 29) | பெண்கள் மீது ஏற்படுத்தும் வன்முறைகளை குறைப்பதில் எமது சமூகத்தின் பங்கு | 50 |
| 30) | தொற்றாத நோய்கள் | 52 |
| 31) | அன்புள்ள தோழிக்கு..... | 54 |

# கல்லூரிக் காலங்கள்

கல்லூரித் தாயின் கருவறை தனிலே
காலடி பதித்த அந் நாட்களில்
கண்களில் சிறுதுளி கண்ணீருடன்
கல்விக்காக வகுப்பறை சென்ற முதல் நாள்

உதட்டில் புன்னகையுடன் வரவேற்றார்
உலகிற்கு என்னைப் பறைசாற்றும் ஆசான்
உருவமே அறியாத சிறுகரம் ஒன்று நண்பியென்று
உடன் வந்து பற்றிக் கொண்டது என் கைகளை

ஆண்டுகள் சென்றது கல்லூரி உலகதனில்
ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை
ஆரம்பக் கல்லூரி மண் வாசனை பிரிந்து
ஆங்காங்கு மேல்நிலைப் பள்ளி சேர்ந்தோம்

இலட்சியம் நிறைந்த நம் கல்லூரி உலகதனில்
இன்பதுன்பம் பகிரவென நண்பியர் கூட்டம்
கல்லூரிச் சாலை தனிலே எம்தோழியருடன்
கலக்கமின்றி இருந்தகாலம் பொற்காலமே

கதைகள் பல பேசி பகிர்ந்தோமே அனைத்தையுமே
க.பொ.த சாதாரண பரீட்சை பிரித்தது சில நட்பை
அன்புடன் வழி காட்டும் அதிபர் ஆசையுடன்
அரவணைத்து அறிவூட்டும் ஆசான்
அற்புத விளக்காய் ஒளிரும் நட்பு - இவற்றுடன்
அன்றாடம் தொடரும் நம் கல்வி.

உயிர் கொண்ட ஓர் நட்பு பிரிந்த போதும்
உண்மையாய் கிடைத்தது பல நட்பு
உலகமதில் எங்கு பிரிந்து சென்றாலும்
உள்ளமதிலே நினைத்தாலே இனிக்கும்
நம் கல்லூரிக் காலங்கள்.

**அ. அனுஷா**
12 கலைப்பிரிவு (2014)

# அனைவருக்கும் கல்வி

அனைவருக்கும் கல்வி என்ற கோஷம் இன்று உலக நாடுகள் எங்கும் ஓங்கி ஒலிக்கின்றது. அரசுகளின் இன்றியமையாக் கடமைகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. ஒவ்வொரு நாடும் தனது வருமானத்திற் பெரும் பகுதியைக் கல்விக்காகச் செலவிடுகிறது. ஆனால் இதன் பயன்பாடு பூரணத்துவமுள்ளதாக அமைகின்றதா? என்பது சிந்தனைக்குரியதாகவே விளங்குகின்றது.

மனிதசமுதாயம் பல வகையான மக்கட்கூட்டத்தைக் கொண்டுள்ளது. படித்தவர், பாமரர், செல்வார்கள், ஏழைகள், நல்லவர்கள், தீயவர்கள் எனப் பல்வேறு பாகுபாடுகள் நிலவுகின்றன. சமுதாயத்தில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் இருக்க வேண்டுமா? இவை அவசியந்தானா? என்றால் இல்லையென்றே கூறுவர். எனவே இது பற்றி நாம் நன்கு சிந்திக்க வேண்டும். மனிதனுக்கும் மற்றைய பிராணிகளுக்கும் உள்ள வேறுபாடு பகுத்தறிவு என்பதாகும். பகுத்தறிவே மனிதனை உன்னத நிலைக்கு இன்றுவரை உயர்த்தி வைத்துள்ளது. இதன் மூலமே மனிதன் மொழிகளை உருவாக்கவும் விஞ்ஞான ரீதியில் புதியன பலவற்றை உருவாக்கவும், புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்கவும் முடிகிறது. காலந்தோறும் தாம் கண்டறிந்த உண்மைகளைத் தத்தம் மொழிகளில் பதிந்து வைத்தும் பயன்படுத்தியும் முன்னேற்றம் கண்டுள்ளனர். தாம் அடைந்த முன்னேற்றத்தை நிலை நாட்டவும், தத்தமக்கேற்ற வழிகளில் பயன்படுத்தவும் கல்வியே மனித சமுதாயத்திற்கு உகந்த ஒரேயொரு சாதனமாகத் திகழ்கிறது. கல்வியின் மூலமே ஒரு சமுதாயத்தின் பண்பாடும் விழுமியங்களும் அழிந்தொழியாது பாதுகாக்கப் பட முடியும். இந்நிலையில் மனித சமுதாயத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கி எல்லோரும் ஓர் இனம் என்ற உயர்ந்த குறிக்கோளுடன் சமத்துவமாகச் சகலரும் வாழ்வதற்குரிய வழியினைக் காட்ட வல்லது கல்வி ஒன்றேயாகும். எல்லோரும் சமத்துவமாக எல்லாம் பெற்று வாழ வேண்டுமாயின் அனைவருக்கும் உகந்த கல்வி அளிக்கப்படுதல் அவசியமாகும்.

நாம் வாழும் சமுதாயத்தை ஓர் உடலாக உருவகிப்போமாயின் அந்த உடலில் உள்ள எந்த உறுப்பையும் நாம் ஏற்றது அல்ல என ஒதுக்கி விடமுடியாது. ஓர் உறுப்புக்கு ஊறு நேர்ந்தால் அது உயிரின் இயக்கத்திற்கே பாதிப்பை ஏற்படுத்தி விடும். இதே போன்று தான் கல்வி என்பது ஒரு சமுதாயத்தின் உயிர் மூச்சாயமைந்துள்ளது. சமுதாய உறுப்புக்கள் யாவிலும் கல்வி தனது ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. அதற்கு பங்கம் விளைந்தால் சமுதாயமே பெரிதும் பாதிப்புறும். கல்வி என்பது நமது கண்போன்றது. கல்விக்கண் இன்றேல் நாம் கண்ணிருந்தும் குருடராகவே கருதப்படுவோம் எனவே அனைவருக்கும் கல்வி அளிப்பதன் மூலமே சமுதாயம் ஒளிபடைத்த சமுதாயமாகத் திகழ முடியும்.

**"விலங்கொரு மக்கள் அனையர் இலங்கு நூல்**
**கற்றாரோடு ஏனையவர்"** - என்பது வள்ளுவர் வாக்கு. மனிதன் விலங்காக வாழக்கூடாது. அவன் மனிதனாக, மனிதப் பண்புள்ளவனாக வாழவேண்டும். அதற்குக் கல்வியே அச்சாணி. ஒரு சமுதாயத்தில் ஒரு பகுதியினர் கல்வியறிவு படைத்த மனிதராகவும் மற்றப்பகுதியினர் கல்வியறிவில்லாத மாக்களாகவும் வாழநேர்ந்தால் அந்தச் சமுதாயம் சீர் பெறமுடியாது. முழுச்சமுதாயத்திற்குமே அது பெரும் இழுக்காகும். இவ்வுண்மையை நன்குணர்ந்தமையாற்றான். ஒவ்வோர் நாட்டரசும் தனது குடிமக்களுக்குக் கல்வியளிப்பதைப் பெரும் கடனாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. ஒரு குறிப்பிட்ட

வயது வரை கட்டாயக்கல்வி புகட்டுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. ஆனால் அரசு அளிக்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தாது சிலர் வறுமை, அறியாமை, அலட்சியம் காரணமாகத் தங்கள் பிள்ளைகளின் கல்வியிற் கவனம் செலுத்தாது விடுகின்றனர். இதனால் வருங்காலப் பிரசைகளான மாணவர்கள் பலர் கல்விபெறும் வாய்ப்பினை இழந்து விடுகின்றனர்.


வீட்டுவேலைகளுக்கும் வியாபார நிலையங்களுக்கும், கூலித்தொழில்களுக்கும் செல்லும் மாணவர்கள் கல்வியின் அருமையை அறியாது பின்னாளில் இரங்க வேண்டிய நிலைக்குள்ளாகின்றனர். பெற்றோர்களின் தவறு குறித்து வருந்துகின்றனர். படிக்கும் காலம் பொற்காலம் என்பர். அக்காலத்தை இழந்து விடும் மாணவர்கள் கல்விக்கண்ணை இழந்தவர்களாகின்றனர். இது பெரும் கொடுமை. இக் கொடுமை ஒழிய வேண்டுமாயின் அனைவருக்கும் கல்வி புகட்டப்பட வேண்டும். "எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லையென்றால், இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்" என்றார் பாவேந்தர் பாரதிதாசன் இதற்கமைய எல்லோருக்கும் கல்வி புகட்ட ஏற்றன யாவும் செய்யப்பட வேண்டும்.

"அனைவருக்கும் கல்வி" என்றால் குடிமக்கள் அனைவருக்கும் எழுத வாசிக்கத் தெரிந்தாற் போதும்என நாம் கருதி விடக்கூடாது. ஒருவன் தான் பெற்றுக்கொண்ட கல்வியால் தனக்கும் தான் வாழும் சமுதாயத்திற்கும் பயன்படும் அளவிற்கு அவனது கல்வி அமைதல் வேண்டும். எல்லோரும் பொறியியலாளர்களாகவோ, பேராசிரியர்களாகவோ, மருத்துவர்களாகவோ ஆகி விடவேண்டும் என எதிர்பார்ப்பதும் தவறு. அவரவர் தம் ஆற்றலுக்கேற்பத் தொழிற்றுறைக் கல்வியையோ, தொழிநுட்பக்கல்வியையோ, நுண்கலைக்கல்வியையோ பெறும் வாய்ப்பினை நல்கிட வேண்டும். அத்தகைய வாய்ப்பும் வசதியும் கிட்டும் போதுதான் "அனைவருக்கும் கல்வி" என்ற சொற்றொடர் பொருளுடையதாக அமையும்.

இன்று இத்தகைய பொருளுடையதான கல்வியைப் பெறுவதற்குப் பல்வேறு முட்டுக்கட்டைகள் போடப்படுகின்றன. இன, மத, சாதி வேறுபாடுகள் குறிப்பிடுகின்றன. கிராமப்புற மாணவர்க்கும் நகர்ப்புற மாணவர்களுக்கும் இடையே கல்வி வசதிகளை அளிப்பதில் பாகுபாடுகள் காணப்படுகின்றன. பணம் படைத்தோர் பிள்ளைகள் அனுபவிக்கும் வாய்ப்பு வசதிகள் ஏழை மாணவர்களுக்கு எட்டுவதாயில்லை.

இந்நிலை மாறவேண்டும். எல்லா மாணவர்களுக்கும் எல்லா வசதிகளும் கிட்டவேண்டும். அத்தகைய ஒரு சூழ்நிலையிற்றான் "அனைவருக்கும் கல்வி" என்ற சொற்றொடர் அர்த்தமுள்ளதாக அமையும் என்பது உறுதி.

**ப.தாட்சாயினி**
13 கலைப்பிரிவு (2014)



# The Story of mother's Day

The earliest mother's day celebration can be traced back to the spring celebration of ancient Greece in honor of Rhea, the mother's of the Gods.

During the 1600's, England celebrated a day called "Mothering Sunday" celebrated on the 4th sunday of lent (The 40 day period leading up to Easter) Mothering sunday honorded the mother of England. During this time many of the wealthy. As most jobs were located fax from their homes, the servants would live at the houses. of their employees on mothering sunday the servent 5 would have the day off and were encouraged to return home and send the day with their mothers. A special cake, called the mothering cake, was often brought along to provide a festive touch.

As christianity spread through out Europe the celebration changed to honor the "Mother Church" the spiritual power that gave them life and protected them from harm. Over time the church festivel blended with the mothering sunday celebration. People began honoring their mothers as well as the church.

In the United states mother's day was first suggested in 1872 by Julia ward home (who wrote the words to the buttle hymn of the Republic) as a day dedicated the pease ms.Hower would organized mother's day meetings in Boston, mass every year in 1907 Ana Jarris, from philadelphia, began a campagin to establish a national mother's day. Ms.Jarvis persuaded her mother's church in Gratten, west Virginia to celebrate of her mother's day on the 2nd anniversary of her mother's death, the 2nd sunday of Hay.

By the next year mother's day was also celebrated in philadelphia ms.Jarris and her suporters began to write the ministers, businessman and politicians in their guest to establish a national mother's day. It was celebrated in almost every announcement proclaiming mother's day as a national holiday that was be held each year on the 2nd sunday of May.

While many countries of the world celebrated their own mother's day at different times throught the year but now were celebrating mother's day on 10th of may in Srilanka. Put them all togerther, the spell, mother's A word that means the world to me.

**MOTHER**

"**M**" is for the million things she gave me.
"**O**" mean only that she's growing old.
"**T**" is for the tears she shed to save me.
"**H**" is for heart of purest gold.
"**E**" is for her eyes , with love light shining
"**R**" means right and right shell always be.

**Mathange Balendral**
12 Science (2014)

# இலட்சியம்

அன்பு மனங்களின்
கருக்கட்டலில்
அவதரிக்கும்
சிந்தனைப் பூ
அறியாமை தேசத்தின்
குத்து விளக்கு
இருளைக் கிழித்து அறிவைப்
பொழியும் இன்விளக்கு
வாழ்வின் வழியில்
அகப்பட்ட
ஆனந்தத்தின் முகவரி
வாழ்வை வழிகாட்டும்
ஓர் வழி
அதை ஊமைகளும் பேசலாம்
செவிடர்களும் கேட்கலாம்
உயிருக்குள் கலந்து
தத்துவ ஜோதி
அந்த ஜோதியின் ஒளியிலே
பிறந்தது தான்
வாழ்க்கைப் பூக்களின்
அவதாரம்
கல்வி
இது தான் மனித வாழ்வு

**த.தனுசிஹா**
12 கலைப்பிரிவு (2014)

## APRALLEL PROVERBS

### ஒத்த பழமொழிகள்

01. அலைமோதும் போதே தலை முழுகு
Strike while the iron is hot.
02. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.
Make hay while the sun shines.
03. அகத்தின் அழகு முகத்திலே
The face is the index of mind
04. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்
Too much of anything is good for nothing.
05. ஆழமறியாமல் காலை விடாதே.
Look before you leap.
06. ஆனைக்கும் அடி சறுக்கும்.
Good homer sometimes nods.
07. ஆனைவரும் பின்னே மணியோசை வரும் முன்னே.
கேடுவரும் பின்னே மதிகெட்டு வரும் முன்னே.
Coming events cast their shadow before.
08. இக்கரைக்கு அக்கரைப்பச்சை
Distance lends enchantment to the view.

# விடாமுயற்சி

## காட்சி I

**இடம் : பாடசாலை வளாகம்** பாத்திரங்கள்

கலையரசி, கங்கா (மாணவிகள்)

கலையரசி :- ஏய்! கங்கா நில்லடி ஓல் த பெஸ்ட் (ஓடி வந்து கை கொடுத்தபடி)

கங்கா :- (கை கொடுத்து) ஏய்! Good morning all the best

கலை :- கங்கா! சீக்கிரம் வாடி Ground ல ஒடணும் போல இருக்கு சீக்கிரம் வாடி நேரத்திற்கு வந்திட்டம் தானே.

கங்கா :- கலை.. என்னடி இவ்வளவு சந்தோசம். உனக்கு எப்பவும் ஜாலி தான்.

கலை :- ஏன் இருக்காதா ஒரு மாத லீவு போராயிருந்தது இப்போ school க்கு வந்து student ஐ சந்திச்சதுக்கு பிறகு எவ்வளவு சந்தோசமாய் இருக்கு தெரியுமா... ஐயோ... (சந்தோசமாக)

கங்கா :- எனக்கும் அப்படித்தாண்டி TV யும் பார்க்கேலாது ஆசையா வசந்தம் fm ல ஒரு பாட்டும் கேட்கேலாது. ஒரே கட்டுப்பாடு தான். நான் கூட ஒரே டல்லா தான் இருந்தேனடி கலை.

கலை :- சைக்கிள் எடுத்துகிட்டு friends வீட்டுக்கு போன அவங்க perants ஓட அறிவுரைகள் வயது போனதுகள் பேசமா வீட்டுக்குள்ளே படுக்காம friends time ஐ ஏன் தான் வீணடிக்குதோ தெரியலடி? ஒரே அலுத்துப் போச்சுடி கங்கா (பெரு மூச்சு விட்டபடி)

கங்கா :- அனுபவ சாலிகளோட அறிவுரை தான் முன்னுக்குக் கசந்தாலும் பின்னுக்கு அது தாண்டி நல்ல வழிகாட்டியா அமையுமடி கலை.

கலை :- சரி.. சரி.. நான் கூட நல்லாப் படிச்சு எதிர் காலத்தில் பெரிய Doctor ஆக வரணும் என்று தான் விரும்புறன்.

கங்கா :- நான் அப்படியில்லை வேலையோட சேவை செய்கிற ஆசிரியர் பதவி தான் எனக்கு பிடிக்கும்.

கலை :- வாடி.. வாடி சீக்கிரம் crounds க்கு போவம் மெடம் வரப்போறா (இருவரும் கைகளைப் பிடித்தபடி ஓடுதல்)

## காட்சி II

**இடம் : பாடசாலை வளாகம்** பாத்திரங்கள்

பிருந்தா , வனிதா (மாணவிகள்)

வினிதா :- என்னவோ நான் பக்கத்தில் வந்திருப்பதையும் மறந்து அப்படி என்ன ரசனையான பார்வையோ?

பிருந்தா :- (அவள் கைகள் தழுவியபடி) அதோ பாரடி, பச்சை இலைகள் மஞ்சளாக, சிவப்பாக, வெள்ளையாக, றோசாக... எத்தனை விதமான மலர்கள்.... ஆ.... எவ்வளவு? அழகு.

வினிதா :- காலை வேளை அரச மரத்தில் இருந்து பாடும் குயில்கள் மெல்லன தவழ்ந்து வரும் இளவேனில் காற்று.... ஆகா....

பிருந்தா :- அதையேண்டியம்மா கேட்கிறாய், பெரியம்மாவின்ர அண்ணன் தானடி என்ர Result ஐ Net ல பார்த்து pass என்று சொன்னவண்டி 3c 3s என்று பிறகென்ன அம்மா! call வருகுது பார்க்கேலாது...

வினிதா :- எங்கட வீட்டிலையும் பார்க்கேலாது.. A 3C 4S என்று phone ல வந்த உடனே uncle கண்டோஸ் வாங்கிறதுக்கு போனார், தம்பி வெடி கொளுத்திறான்.

பிருந்தா :- எவ்வளவு வாழ்த்துக்கள்.. வருது.. வருது.. அந்த நாள் மட்டும் ஐந்து தடவை phone charge ல போட்டது.

வினிதா :- ஏ! மெடம் வந்திட்டா... வா.... போவம்.

பிருந்தா :- (எழுந்தபடி) கொஞ்ச நேரம் உன்னோடு உரையாடினதில எவ்வளவு Happy ஆக இருக்கு.. வாடி போவம் (இருவரும் செல்லுதல்)

## காட்சி II

**இடம் : பாடசாலை வளாகம்**

பாத்திரங்கள்
கலையரசி, கங்கா, உமா

(இருவரும் வந்தபடி)

கங்கா :- நான் இனி வரமாட்டேன் - பாடசாலை முழுக்கட்டிடமும் சுற்றி கலைவாணி கொலு மண்டபமும் சுற்றி இப்போ மேல் மாடியிலை வந்து நிற்கிறம் நான் களைச்சுப் போனேன் கலை.

கலை :- Please கங்கா கொஞ்ச நேரம் மாடியிலை இருந்து கதைப்பமடி எல்லா student ம் கீழே தான் நிற்கினம்.

கங்கா :- ம்.... இன்னும் பத்து நிமிஷம் Time தர்றேன் சொல்லு.

கலை :- நான் Pass தான் ஆனா ஒரு C குறையுது, Net ல எனக்கு நம்பிக்கை இல்லை. சிலவேளை School க்கு வாற result ல கூடவும் வரும் என்ற நம்பிக்கை எனக்கிருக்குதடி கங்கா.

கங்கா :- அப்படி உனக்கு டவுட் என்றால் நீ recorrection பண்ணி பார்க்கலாம் தானே.

கலை :- அப்படித்தாண்டி நான் படிக்கிறதுக்காக அப்பா, அம்மா எல்லாம் Tv ஐ Off பண்ணிட்டு எனக்கு பக்கத்தில முழிச்சிருப்பினமடி. பாவம் அதுகளை நினைச்சாதாண்டி....

கங்கா :- உண்மையில பெற்றோரை நினைச்சாலே ரொம்ப பரிதாபமாத்தான் இருக்கும் நாங்கள் படிக்கிறதுக்காண்டி எத்தனை தியாகங்கள்? எத்தனை அர்ப்பணிப்புக்கள்? அப்படி எல்லாம் அதுகள் செய்தும் நாங்கள் பெயிலானா... அம்மா... வை... நினைக்கவே பயமா இருக்கடி கலை.

கலை :- (நடந்தபடி) கதைச்சு கதைச்சு கீழே வந்திட்டடம் என்ன?

கங்கா :- போடி மண்டு. எனக்கு படியிறங்கினதிலையே கால் எல்லாம் வலிக்குதடி (5ம் தர மாணவி உமா அழுது கொண்டு வருதல்)

கலை :- ஏன் பிள்ளை அழுது கொண்டு வருகிறாய்? அழாதேயம்மா (பிள்ளையின் கண்ணீரை துடைத்தபடி)

உமா :- அக்கா பஸ்சில நான் வரல்லை காசில்லை நடந்து தான் வந்தனான். அது தான் Late ஆயிடுச்சு மெடம் அடிச்சுப் போட்டடா நல்லா வலிக்குது அக்கா! இரண்டு நாளா அம்மா வேலைக்கு போகலை, அது தான்...

கலை :- (கவலையாக)... ம்..... அழாதையுங்கோ அக்கா இருக்கிறன் இனி Late ஆக வரக் கூடாது என்ன...

உமா :- ஏனக்கா கஷ்ரப்பட்ட ஆக்கள் பெரிய School ல படிக்க கூடாதோ அக்கா.

கலை :- (வாரி அணைத்து) அப்படியில்லையடா கண்ணா (கண்ணீரை துடைத்து) பிள்ளை சாப்பிட்டிட்டு வந்ததோ..

உமா :- ம்.. இந்தாங்கோ.... சாப்பிடுங்கோ (டிபன் கொடுத்தபடி)

கலை :- (டிபனை வாங்கும் போது தவறி கீழே விழுந்து திறந்து கொண்டது) பிள்ளை என்னம்மா இது (அதிர்ந்து) ....க்.. ம்.... (அணைத்தபடி .. அழுது)

உமா :- ஏனக்கா நீங்க அழுறீங்க... (டிபனை எடுத்து மூடி புத்தக பைக்குள் வைத்தபடி)

கலை :- வா பிள்ளை நான் சாப்பாடு கொண்டு வந்தனான், வா சாப்பிடலாம் (கொடுத்தபடி)

உமா :- (சாப்பாட்டை வாங்கியபடி) அக்கா உங்களுக்கு சாப்பாடு.... சரி.. சரி.. நான் சாப்பிடுறேன் (சாப்பிடுதல்)

கங்கா :- கலை, உனக்கு எப்பவுமே இரக்க மனசு தானடி.

கலை :- கங்கா, இருப்பவங்கள் இல்லாதவங்களுக்கு கொடுக்கணும். அது தாண்டி தர்மம், மனிதப் பிறவியின் அர்த்தமே அது தாண்டி.

உமா :- Thanks அக்கா நான் போயிட்டு வர்றேன். சின்னக்கா உங்களுக்கும் தான் bye.

கங்கா :- Good bye டா செல்லம் (இருவரும் கை அசைத்து விடை கொடுத்தல்) கலை வாடி.. மெடம் வந்திட்டா office க்கு போவம் வா. (இருவரும் போதல்)

## காட்சி IV

**இடம் : பாடசாலை வளாகம்** பாத்திரங்கள் : கலை, கங்கா, உமா, வனிதா, பிருந்தா, மெடம்

கங்கா :- என்ன கலை மெடிக்கல்லை என்ன வாங்கினீர்

கங்கா :- அது தானே ஒரு மாதிரியாய் இருக்கிறாய் என்று பார்த்தேன்

கலை :- கங்கா - மெடம் - சொல்லிப்போட்டா இன்னுமொரு C வேணும் என்று A/L படிச்சுக்கொண்டு C எடுத்துத்தாறேன் என்றதுக்கும் முடியாதென்றிட்டா அது தான் ஒரே யோதினாய் இருக்கு.

கங்கா :- அதுதான் சொல்றேன் கலை எதுக்கும் Recorrection பண்ணிப்பார்க் கலாமென்று

கலை :- சே.அம்மாவும் அப்பாவும் எத்தனை நானா பட்டினி கிடந்து எனக்கு சாப்பாடு தந்தினம் பிள்ளை படிக்கட்டும் என்று (அழுது) அம்மா இவ்வளவு காலத்துக்கும் விலை கூடின உடுப்புக்கூட போட்டதில்லை. எல்லாம் என்னைத்தான் பார்த்துக் கொண்டிருக்கினம்.

கங்கா :- கலை - என்னப்பா இப்படி மனதை விடுறீர் அழாதே student எல்லாம் எங்களைத்தான் பார்க்கினம்.

கலை :- இன்று தான் எங்கேயோ அம்மா கடன் வாங்கி எனக்கொரு புதுச் சைக்கிளும் தனக்கொரு புதுச்சட்டையும் வாங்கினவா இந்தக்கடன் எல்லாம் என்னை நம்பித்தானே வாங்கினவா கங்கா நான் பாவியடி பாவி (அவளின் முனத்தில் முகம் புதைத்து அழுதல்)

கங்கா :- கலை - இப்போ எங்கே போகிறீர் கண்ணைத்துடையும் நான் அம்மாவோடு வந்து கதைக்கிறேன். ஆனால் நீ அடுத்தமுறையானது றிப்பிற் படிச்சன்றாலும் சித்தி அடைஞ்சிடு சிரியா வா போவம்.

## காட்சி IV

**இடம் : பாடசாலை வளாகம்** பாத்திரங்கள் : கலையரசி, கங்கா, மெடம்

கங்கா :- (வந்தபடி) என்னடி கலை! ஆழ்ந்த யோசனை

கலை :- கங்கா (கட்டித்தழுவி) வா... உன்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன் - இன்னும் மெடம் வரவில்லை

கங்கா :- (தழுவலை விழக்கி) விடடி கலை... உன் அன்புக்கு அழவேயில்லையாடி?

கலை :- (விலகியபடி) இல்லையடி கங்கா இல்லை - போன வருஷம் என்னோடு O/L எடுத்தனி இந்த வருஷம் A/L க்கு போயிட்டே - ஆனா நான் இந்த வருஷம் தான் O/L ல்ல பெஸ்டா பாஸ் பண்ணி இருக்கிறன் - இப்பவும் என்னை தேடியும் திரும்பியும் பார்க்கிறாயே. உன் மனதை நினைக்கிற போதுதாண்டி - எனக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கடி.

கங்கா :- போன ரெஸ்ரில நீ பெயிலானதில ரென்சனா இருந்த உன் மனநிலையை கிளியர் பண்ணி - உன் அம்மாவின் பிடிவாதத்தையும் தளர்த்தினது நான் தான் ஆனா முழுசா படிச்சு இம்முறை பெஸ்டா பாஸ் பண்ணினது நீதானே

கலை :- ஒரு ரியூசன் மட்டுமே படித்த நான் - மன உளைச்சல் வந்து - உன்னிடம் வரும் போதெல்லாம் தளர்ந்துவிடும் என் படிப்பை துளிர்த்து விட துணைபுரிந்தாயே! ரீ - சாப்பாடு எல்லாம் வழங்கினாயே கங்கா! (கண் கலங்கி)

கங்கா :- ஏய்..என்னடி..அழாதே..கண்ணைத்துடைலூசு (அவளது கண்ணீரைத் துடைத்து) மெடம் வந்திட்டா வா போவம் - நான் எப்பவும் உன் பிரன்ஸ்தானடி (நடந்தபடி)

மெடம் :- (அறைக்குள் வந்த இருவரையும் பார்த்து)... ம் ... வாங்க... வாங்க... ஓல் த பெஸ்ட் (கலையரசிக்கு கைகொடுத்து) கலையரசி நைன் A எடுத்து சிறப்பாகப் பாஸ் பண்ணியிருக்கிறாய் - வாழ்த்துக்கள் - உமது விடா முயற்சியை பாராட்டிறன்.

கலை :- தாங்ஸ் மெடம்... (தயங்கியபடி)

மெடம் :- என்ன கங்கா ஏல் / எல்க்கு போனாலும் பழைய சினேகிதத்தை மறக்கவில்லை போலிருக்கு.

கங்கா :- ம்... ம்..... ஆமாம் மெடம்... (மெதுவாகச் சிரித்து)

மெடம் :- கங்கா! நீர் கலையரசியின் கல்வி வளர்ச்சிக்குச் செய்த பங்களிப்பு - பெற்றோர்க்கும் உமக்கும் - எங்கள் கல்விச் சமூகத்திற்கும் பெருமையைச் சேர்த்திருக்கிறது.

கங்கா :- என்னங்க.. மெடம் (நாணியபடி)

மெடம் :- கங்கா! இப்படி கல்வியில் தளம்பல் நிலையில் இருப்பவர்களுக்கு - உம்மைப் போல ஒரு கொழு கொம்பு கிடைச்சா.. கிடைக்கணும். உம்மை நான் பாராட்டிறன்

கங்கா :- மிக்க மகிழ்ச்சி மெடம் (சிரித்தபடி)

மெடம் :- கலையரசி! இம் முறை வெளிநாட்டிலை இருக்கிற - எமது பழைய மாணவ அங்கத்தவர்கள் சாதாரண - உயர்தர மாணவர்களை தாங்களே பொறுப்பெடுத்து படிப்பிக்கிறாங்க உமக்கு அதிஷ்டம் அடிச்சிருக்கு - சந்தோசம் தானே?

கலை :- மெடம் - நீங்கள் என் தெய்வம்

மெடம் :- அது சரி. போன இயரிலை நான் றிப்பிற் எடுக்கச் சொன்ன போது - ரென்சனோடு போன உம்மால் எப்படி இவ்வளவு திறமையாய் படிக்க முடிஞ்சுது.

கலை :- முதலாவது கங்காதான் காரணம் - அடுத்தது லைவ்பிரரி கிடைச்ச பாரதியின் புதுமைப்பெண் புக் என உள்ளத்தை ஈர்த்தது.

மங்கையரெல்லாம் நிச்சயம் படிக்கவேண்டும் சம அந்தஸ்து பெறவேண்டும் என்ற கவிதைகள் என்னிடம் போராட்டத்தை ஏற்படுத்தின.

மெடம் :- ம்... (சிரித்து) சொல்லும்

கலை :- அடுத்ததாக கிடைச்சது - சேக்ஷ்பியரின் உன்னையே நீ அறிவாய் என்ற வாசகம் தான் நீயார் - உன்னால் முடியாதது என்ன - நீ நினைத்தால் இப் பூமியை வெட்டமுடியும் எந்த கட்டாந்தரையைக் கூட பசும் சோலையாக மாற்றமுடியும் முதலில் உன்னை நம்பு - உன்னைப்பற்றி உனக்குத்தான் தெரியும் - பலம் - மனம் - திடம் எது என்பது உனக்கே புரியும்

மெடம் :- ம்... மேலும்... (சிரித்து)

கலை :- தோல்விகளை தூக்கியெறிந்து விட்டு புறப்படு - உன் இலக்கை நோக்கி வீரநடைபோடு - உன்னால் முடியாதது எதுவுமேயில்லை - உன்னையே நீ அறிவாய் - இந்த வாசகம் தான் என்னை முழுமூச்சோடு படிக்க வைத்து - இன்று வெற்றிப்படியின் உச்சியிலேயே என்னை கொண்டு வந்து விட்டிருக்கிறது மெடம்

மெடம் :- சபாஸ் - வெரிகுட் கலையரசி (முதுகில்தட்டி - சிரித்து) ம்..... உன்னையே நீ அறிவாய் - மீண்டும் என் வாழ்த்துக்கள் (அறை வாசலில் நின்று மாணவர்கள் கைதட்டுகிறார்கள்)

சுபம்.

**ந.நளாயினி**
12 கலைப்பிரிவு (2014)

## கடவுள்

ஆதி அந்தமில்லாத ஒருவன்.

நம் அற்ப அறிவுக்குப் புலனாகக் கூடிய சின்னஞ்சிறு அம்சங்களிலே வெளிப்பட்டுக் காட்சி அளிக்கிறான்.

நான் பணிவுடன் அதைக் கண்டு வியப்புறுகிறேன். அப்படி வெளியாகும் உன்னத ஞானக் களஞ்சியம் தான் கடவுள்.

[ஐன்ஸ்டீன்]

# குடும்பத்தைப் பாதுகாப்பவளை மேம்படுத்துவோம்

மனித சமூகத்திலுள்ள பழமை வாய்ந்த சமூகக் கட்டமைப்பு குடும்பமாகும். குடும்பம் என்னும் கட்டமைப்பு எங்கு, எப்போது உருவானது என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஆயினும் மனிதன் இப்பூவுலகில் தோன்றிய காலம் தொடக்கம் ஏதோவொரு வகையிலான குடும்பப் பிரிவு ஒன்றில் அவன் வாழ்ந்திருப்பான் என்பதை உறுதியாகக் கூறலாம்.

பூமியைப் பாதுகாக்கும் ஓசோன் படைபோல் உலகைக் காக்கும் குழந்தையைப் பாதுகாக்கும் கருவறையினுள் பூமியைக்குளிரச் செய்யும் கடல் போன்ற கருப்பைத்திரவத்தினுள் மிதந்து வாழ்ந்து கருஇருளில் களித்துறங்கிய கருமுகில் தாயானாள். கருவிறங்கி உலகின் குளிர்மைக்காய்க் கண்விழித்தாள். உலகின் ஒளி பூமித்தாயின் மடியில் புகழிடம் புகுத்து பெண்ணாயப் பிறந்து கள்ளிப் பாலுக்கு இரையாகியகாலம் கரைந்தோடி, அவள் சொல்லுக்காய் நாடு விழித்திருக்கும் காலம் காட்சிக்கு வந்துவிட்டது. இன்று விண்வெளியில் உலாவந்த வலன்டீனா தெரஸ்கோவின் மூலம் பெண் தைரியத்தின் முழுவடிவம் இன்பம் சுவைக்கும் சுதந்திரப்பறவை.

பெண் என்றும் அடிமையில்லை. அவளை யாரும் அடக்கவுமில்லை அவளே அடங்கி வாழ்ந்தாள். அவளின் மென்மை அடக்கத்தை அணிகலனாக்கியது. அன்றும் இன்றும் பெண்களைப் பாடும் கவிஞர்களே அதிகம். கொடியெனக் கணவன் தோளில் சாய்ந்தாள். கொளு கொம்பாய் அவன் இருக்க அவனைப் படர்ந்தாள். கரமென மாமியார் உறவில் கைகோர்த்தாள். ஆசானாய் குழந்தைகளை ஆற்றுப்படுத்தினாள். நாத்தனார் வாழ்வில் நலன்விரும்பியானாள். மொத்தத்தில் குடும்பச்சொத்தே அவளானாள். பல வீடுகளின் ஆட்சியே நாட்டின் ஆட்சி பல வீடுகளிணைந்ததே நாடு. வீடு விளங்க நாடு விளங்கும். எனவே தான் பெண்கள் வீட்டின் ஒளி அல்லது நாட்டின் ஒளி என்கிறோம். இந்த வீட்டுக்கு விளக்கேற்ற பெண்தேவை என மாமியார் நாடுவதன் சூட்சுமம் தான் என்ன? விளக்கேற்ற விரல்களற்றவர்களா வீட்டிலிருப்போர். புகுந்த வீட்டின் பெருமை ஒளியை உலகிற்கு விளக்கவென புகுந்தவளாதலால் விளக்கேற்ற ஒரு பெண் வரவேண்டும் என்ற வார்த்தையைப் பிரையோகிக்கின்றனர். பெரியோர் மென்மையான இதழ்பட்ட ஊதுகுழல் வெறுங்காற்றை உள்ளெடுத்து இசையாக வெளியே பரப்புதல் போல கணவன் மனையில் மென்மையாகப் புகுந்து சாதாரண குடும்பத்தை தரமான குடும்பமாய் உலகிற்கு உணர்த்தப் புகுமனையில் கால் வைப்பாள். இவ்வாறு கால் வைப்பவளை கணவன் சிறந்தமுறையில் நடத்த வேண்டும். தனது மனைவியை துணைவியாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும், இனிமையாகப் பேசுதல் வேண்டும், அவமானப்படுத்தாதிருத்தல் வேண்டும், வீட்டு நிர்வாகத்தில் ஒற்றுமையாகப் பணிபுரிதல் வேண்டும், இன்பத்திலும் துன்பத்திலும் தனது மனைவியின் பாதுகாவலனாகப் பணிபுரிதல் வேண்டும்.

உடலுறுதி கொண்ட ஆணைவிட மனவுறுதி கொண்ட பெண் சிறப்புமிக்கவள். பெண்ணுக்கு பிரசவம் என்பது மறுபிறப்பு என்பார்கள். ஒரு குழந்தையைத் தனது கருப்பையில் 280 நாட்கள் வரை தாங்கி பிறக்கும் வரை எத்தனையோ வேதனைகளைச்சுமக்கின்றாள். தன் உயிரைப் பணயம் வைத்து அந்தக்குழந்தையைப் பெற்றெடுக்கிறாள். இதன் மூலம் அவளின் தைரியத்தின் தன்மை

எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. கருணைக்கும் இரக்கத்திற்கும், சகிப்புத்தன்மைக்கும், பொறுமைக்கும் இருப்பிடம் பெண்தான். எனவே தான் ஒரு குழந்தை வளரும் வரையில் தாயின் பராமரிப்பில் இருக்கவேண்டும் என்று சட்டம் கூறுகிறது. இதனை பெற்றோர் மகிமை என்னும் கவிதைத் தொகுப்பில் பின்வருமாறு கூறப்படுகிறது. துன்பம் பலவும் சுமந்திடுவாள் இன்பம் பலவும் சுமந்திடுவாள், துன்பம் தாங்கும் வெண்ணிலாஅவள், அன்னைக்கு ஈடாம் பொருள் உண்டோ.

இல்லறத்தை விடச்சிறந்த அறம் ஒருவனுக்கில்லை இந்த இல்லறத்தைச் சிறப்பான முறையில் நடத்தவேண்டும்மென்றால், சிறந்த இல்லாள் தேவை. இதன் மூலமே அவன் சமூகத்தின் முன் ஏறுபோல் பீடுநடை பயிலமுடியும்மென வள்ளுவப் பெருந்தகை கூறி இருக்கிறார். உடலால் வாழும் ஆணைவிட உள்ளத்தால் வாழும் ஆற்றல் பெற்ற பெண் உலகில் சிறப்பு பெறுகிறாள். இந்தப் பெருமையை உணர்த்துவதன்

**"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவும் செய்திடல் வேண்டுமம்மா"** என்று கவிமணி தேசிய விநாயகப்பிள்ளையவர்கள் கூறுகின்றார்.

"ஒரு அழகிய கற்புடை பெண் ஆண்டவனின் முழுமையான சிறந்த படைப்பாகவும், தேவதைகளின் பெருமையாகவும், உலகின் அதி அற்புதமான தனித்த அதிசயமாகவும் விளங்குகிறாள்" என்று 'பொவீ' என்னும் அறிஞர் மொழிந்துள்ளார். இதனையே தான் நமது மகாகவி பாரதியாரும்

**"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்**
**புவிபேணி வளர்ந்திடும் ஈசன்"**

இவ்வாறு தனது வாழ்வைத் தமது குடும்பத்திற்காக அர்ப்பணித்து குழந்தைகளை வளமாக வாழ வைத்து தனது குடும்பத்தையும் ஒளிவிளக்காய்த்தாங்கி ஒளிதந்து குடும்பத்தைப் பாதுகாப்பவளைப் பேணவேண்டும். எனவே இதிலிருந்து பெண்ணின் பெருமையை உணர்வோம். புவிபேணி வளர்ந்திட அவள் புகழ் பாடுவோம்.

**அருளானந்தம் அனுசியா**
12 கலைப்பிரிவு (2014)

## அழகு சேர்ப்பவை

கைக்கு அழகு நன்கொடை
தலைக்கு அழகு பெரியோர் பாதசேவை
முகத்துக்கு அழகு உண்மையான சொல்
புஜங்களுக்கு அழகு ஒப்பற்ற பராக்கிரமம்
மனதுக்கு அழகு நல்லொழுக்கம்
செவிக்கு அழகு நல்ல சாத்திரங்களைக் கேட்டல்.

(ஆதிசங்கரர்)

# Poetry

## A question to the sigiri scribbler

More than a thousand years ago
Having seen the sigiriya frescoes
A scribbler
Wrote a graffiti
On the sigiri Mirror Wall
"Beauty
You have removed your jacket
But not your lower garments
Why is that?
Why does that question arise?

## Silence

Look how estatic
Flying parrots are
Spreading the wings
And letting their wind
To carry them above the heaven
Look how depressed
The caged parrot is
Being jailed inside the cage
See the value of silence
The talktive parrot is caged
While the silent parrots
Fly far away over the moon

## Dear mother

The light of your shining eyes
Enlighten my gloomy world
Your kind words
Console my weeping heart
Your sweet Voice
Heals the wound in my heart
When you hug me
You lesson the pain in my body
When you wipe my mourning face
With pouring tears,
I feel a great comfort
Feeling true maternal love

## Impermanence

Everymoment of the day in our lives
We undergo a multitude of changes
Nothing is permanent although in many ways we strive
To traverse freely and securely in many ranges
We get together we are happy and then we lose
All our procession in life and when we depart
Impermanence is the truth and we cannot choose
To hold on to anything but only be ready for a new start.

**S.Suvarna**
12 Commerce (2014)



# மீண்டும் அரங்கேறும் பாஞ்சாலி சபதம்

மகாபாரதக் கதையிலே தருமனுக்கும் துரியோதனனுக்கும் இடையே சூதாட்டம் நடைபெறுகின்றது. துரியோதனனின் மாமன் சகுனியினது வஞ்சகத்தாலும் தந்திரப்பேச்சாலும் சூதாட்டத்துக்குள் தருமன் இழுக்கப்பட்டான். பந்தயப் பொருட்களாகப் பொன், பொருள், குதிரை, தேர், நாடு, நகரம், மக்கள் எல்லாம் வைத்தான். ஆடினான் - தோற்றான் இழந்தான். அடுத்து தனது தம்பிமாரை வைத்தான் தோற்றுப்போனான் தன்னையும் வைத்து ஆடினான் தன்னையும் இழந்தான் இது தான் சூது.

சூது போதை போன்றது அவர்கள் அறியாமலேயே அவர்களை அது எங்கோ இழுத்துச் சென்று அவர்களிடம் உள்ளதை எல்லாவற்றையும் இழக்கச் செய்துவிடும். இறுதியில் அவர்களையும் இழக்கச் செய்துவிடும். அறிவும் திறமையும் மிக்க தருமனையே "சூது" இழுத்து வீழ்த்திவிட்டது. இதுதான் மகாபாரதம். எமக்குச் சொல்லும் செய்திகளில் ஒன்று எனவே சமூகத்தில் சகுனி, துரியோதனன் போன்ற வஞ்சகம் கொண்டவர்களது அறிமுகங்கள் கிடைக்கலாம். சூது போன்ற போதையும் கிடைக்கலாம். தருமன் போன்ற ஆற்றல்மிக்கவர்களையே அந்த வஞ்சகர்கள் வீழ்த்திவிடுவார்கள். போதை நல்லவர்களையும் நாசமாக்கக்கூடியது கவனம் என்கிறது மகாபாரதம்.

அதுமட்டுமல்ல தருமனை சூது அத்துடன் விடவில்லை தருமன் மனைவி பாஞ்சாலியையும் இறுதியில் பந்தயமாக வைத்து ஆடுகிறான் தருமன் பாஞ்சாலியையும் இழந்துவிட்டான். துரியோதனது எண்ணம் பலித்தது. துரியோதனன் பாஞ்சாலியை சபைக்கு அழைத்து வரும்படி கட்டளை இடுகிறான். தேரோட்டி சென்று பாஞ்சாலியை அழைத்தான் "உம்மைத் தோற்றீரா" என சூதாடியவர்களைக் கேட்டுவரும் படி பாஞ்சாலி விடைகூறுகிறாள். தேரோட்டி சபைக்குத் திரும்பிச் சென்றுவர துரியோதனன் கொதித்து எழுகிறான். அவளை சபைக்கு வந்து அந்தக் கேள்வியைக்கேட்கச் சொல்லு என தேரோட்டியை திருப்பி அனுப்புகிறான். தேரோட்டி மீண்டும் சென்று பாஞ்சாலியிடம் துரியோதனன் கூறியதைக்கூற பாஞ்சாலி மீண்டும் அவனைத் திரும்பிச்சென்று சபையோரிடம் இந்தக் கேள்வியை கேட்டு விடையை அறிந்து வா எனத் தேரோட்டியைத் திருப்பி அனுப்புகிறான், தேரோட்டி திரும்பிச்சென்று துரியோதனிடம் கூற மிகக்கோபம் கொண்ட துரியோதனன் தம்பி துச்சாதனனை "நீ போய்' பாஞ்சாலியை இழுத்து வா" என ஆணையிடுகிறான்.

வெறிபிடித்து ஆடிய துச்சாதனன் பாஞ்சாலியைப் பிடித்து இழுத்து வருகிறான். என்ன கொடுமை அவன் "மாதவிலக்கில்" இருக்கிறேன் என்று கூறியும் கற்றைக்குழல் பிடித்துக் கண்ணில்லான் மகன் இழுத்து வருகின்றான்.

**"ஐயகோ வென்றே யலறி யுணர்வற்றுப்**
**பாண்டவர் தந் தேவியவள் பாதியுயிர் கொண்டுவர**
**நீடை கருங்குழலை நீசன் கரம்பற்றி**
**முன்னெழுத்துச் செல்கிறான் வழி நெடுக மொய்தவராய்**
**என்ன கொடுமையிது வென்று பார்த்திருந்தார்"**

என இந்தக் காட்சியைக் கண்ட பாரதி தனது பாஞ்சாலி சபதத்தால் சீறுகிறார். யாரைப் பார்த்துச் சீறுகின்றார் என்றால் துச்சாதனைப்பார்த்து அல்ல. அந்தக் கெட்டவன் பாஞ்சாலியை இழுத்துச் செல்லும் போது அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஊர் மக்களை ஏசுகின்றான். அந்தக் காட்சியைப் பார்க்கக் கூடியவர்களை சுட்ட "மொய்த்து" என்ற வார்த்தையைப் பாவித்தான். அதாவது மக்களை விலங்கின அஃறிணைப் பொருளாகக் காட்டுகிறான். வேடிக்கை பார்த்த மக்களின் மேல் அவ்வளவு கோபம் பாரதிக்கு.

"நெட்டை மரங்களான நின்று புலம்பினார் பெட்டைப் புலம்பல் பிறர்க்குத் துணையாமோ? என கூடியிருந்த மக்கள் மேல் மேலும் பாய்ந்து விழுகிறான் பாரதி. சும்மா கத்துகிறார்கள் இவர்கள் பெண்களைப் போல் செயலற்றவர்களாக நின்று வெறும் உக்கிரப் போடுகிறார்களே எனக் கத்துகிறார். ஈக்களைப் போல் மொய்த்தார்கள் என மக்களை வர்ணித்த பாரதி மேலும் கோபம் கொண்டகால் ஈக்கள் போன்ற விலங்கு இனங்களுக்கும் இவர்களை ஒப்பிட முடியாது அதனிலும் கீழானவர்கள் என நினைக்கிறார் அதனால் பெட்டைப் புலம்பல் இவர்கள் வெறும் மரங்கள் எனப் பேசுகிறான். இது சமூகத்துக்கு பாரதி பாஞ்சாலி சபதத்தின் ஊடாகச் சொல்லும் மேலுமொரு செய்தி.

சமூகத்தில் சகுனி, துரியோதனன், துச்சாதனன் போன்ற துஷ்டர்கள் இருக்கத்தான் செய்வார்கள். பாஞ்சாலி போன்ற அப்பாவிப் பெண்கள் மேல் இவர்களது பார்வை பட்டால் பெண்கள் பாஞ்சாலியைப் போல் துணிவுடன் எதிர்த்துக் கேள்வி கேட்க வேண்டும். அதையும் மீறி கைகள் படுமானால் சமூகம் அவர்களை எதிர்கொண்டு வீழ்த்தவேண்டும் இது பாரதியின் பார்வை பாரதியின் கனவு.

இன்றைய சமூகத்திலே பெண்களுக்கு எதிராக ஏராளமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. துஷ்பிரயோகங்கள், பாலியல் சேஷ்டைகள், பாலியல் துன்புறுத்தல்கள், வன்புணர்வுகள் என பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்படுகின்ற இப்படியான செயற்பாடுகளால் பெண்கள் பாஞ்சாலிகளாகச் சித்திரவதைப் படுத்தப்படுகின்றார்கள் இப்படியாக பெண்களைத் தீண்டும் தீயவர்களைப் பார்த்து பல சந்தர்ப்பங்களில் சமூகம் பொங்கி எழுந்து சீறியது, குழறியது, கிட்டியது அது மட்டும் தான் அத்தோடு அவர்களது சீற்றம் தீர்ந்து விடுகிறது. இவர்களைத் தான் பாரதி "நெட்டை மரங்கள்" என்று கூறுகிறார்.

அநீதிக்கு எதிராகக்குரல் கொடுப்பதோடு நின்று விடாமல் - வாய்வீரர்களாக மட்டும் இராமல் - செயல்வீரராக மாறித் தீயவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது பாரதியின் கனவு. வெறும் மரங்களாக நிற்காமல் மனிதர்களாக மாறவேண்டும். பாதிக்கப்பட்ட பெண்கள் பாஞ்சாலி போன்று "சபதம்" கொள்ள வேண்டும். அறிவும் - உணர்வும் கொண்ட மனிதர்களாக எப்பொழுது மாறுகின்றோமோ அப்போது சமூக அநீதிகள் அழியும். நீதி பிறக்கும் சமூகம் விடுதலை காணும். நாடு இன்பமுறும் "இந்த நானில முற்றும் நல்லின்பத்தில் வாழ்க" என்ற பாரதியின் வாழ்த்தும் அப்போது பலிக்கும் உண்மைச் சுதந்திர விடுதலை கிடைக்கும்.

**ஜெ.அபிவர்ணா**
12 கலைப்பிரிவு (2014)

# தெய்வீக தேன் அமிர்தம்

01. கடவுளின் நாமத்தை நாள்தோறும் நினைப்பவர்களுக்கு வாழ்வின் கவலைகளைப் பற்றிய பயம் இல்லை.

02. பெருத்த தொகையினை சம்பளமாக ஈட்டுவது பிரதான குறிக்கோளே அல்ல. இல்லவே இல்லை. பண்பினை வளர்த்துக்கொள்வதே இலக்காக இருக்க வேண்டும்.

03. அமைதி காப்பது சாதனையில் ஒரு அடி எடுத்து வைப்பதாகும். அமைதி காத்திடும் பொழுது இறைவன் இருப்பதனை நீங்கள் உணர்கிறீர்கள்.

04. கோட்பாடுகளில்லாத அரசியல் மனிதநேயமற்ற விஞ்ஞானம் ஒழுக்கமில்லாத கல்வி நேர்மையற்ற வணிகம். இவையெல்லாம் விரும்பத்தகாதது மட்டுமல்ல மிகவும் ஆபத்தானவையுமாகும்.

05. தன்மனதை தன் வயப்படுத்திக் கொள்பவனே உண்மையான வெற்றியாளன்.

06. தவறான பாதைகளில் செல்வதனைத் தவிர்த்திடுங்கள். தீய சகவாசத்தினை விலக்கிடுங்கள். இதுவே உங்களுக்கு சுயமரியாதையினைப் பெற்றுதரும்.

07. தூய்மையான வார்த்தைகள், தூய்மையான பேச்சு, புனிதமானவற்றைக் கேட்பது, புனிதமானவற்றைப்படிப்பது, புனிதமான விஷயங்களைப் பார்ப்பது ஆகியன இதயத்தினை தூய்மையாக்கி விடும்.

08. கடவுள் நாமத்தைக்கூறுவதால் காற்று மண்டலம் தூய்மை அடைகிறது.

09. நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பது மட்டுமன்றி அனைவரையும் மகிழ்ச்சியாக இருக்க வைப்பதும் அவசியம்.

10. அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கான வழியைச்சொல்லித் தரும் கல்வியே நல்ல கல்வியாகும்.

11. மனிதன் குற்றம் செய்வது இயற்கையானது என்று எண்ணுவதே பெரிய குற்றமாகும்.

12. உண்மை என்ற ஒன்று மட்டுமே உள்ளது. அதுவே உண்மையான நட்புறவு ஆகும்.

13. பிறருக்குத் துன்பம் ஏற்படாத வகையில் உங்களது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

14. மாணவர்கள் இலட்சியத்தன்மையுடன் இருக்க வேண்டும்.

15. மற்றவருடன் நற்குணங்களை, நல்ல ஆலோசனைகளை நல்லெண்ணங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும்.

16. எவ்வளவு உயர்ந்த கல்வி கற்றாலும், கடவுளிடம் உள்ள நம்பிக்கையை இழக்காதீர்கள்.

17. விருப்பங்களின் தொகுப்பே மனமாகும். விருப்பமில்லாத மனம் தான் சுத்தமாக இருக்கும்.

18. ஒரு மனிதன் முதலில் முக்கியமாக வளர்த்துக்கொள்ள வேண்டிய குணம் பொறுமைதான்.

19. புலன்களை கட்டுப்படுத்தல், கடவுளிடம் சரணாகதி அடைதல் இவ்விரண்டும் பொறுமையை வளர்க்கக்கூடிய முக்கியமான அம்சங்களாகும்.

20. அனைவரும் இன்பமடையட்டும்!
அனைவரும் நோயற்றவர்களாகட்டும்!
அனைவரும் நன்மைகளைப் பெறட்டும்!
எவரும் துன்பமடைய வேண்டாம்!

**இ. நிவிதா**
12 வர்த்தகப்பிரிவு (2014)

# கல்வியே உனக்காக

அறிவிலரே
கல்வியின் உன்னதம்
தெரியுமா உனக்கு?
மனித இராசியின்
மகத்துவம் தெரியுமா?
உயிர் என்பது
ஒரு துளி விந்தின்
பிரயாணம் தானடா - ஆனால்
கல்வியோ ஏழு ஜென்மை
தொடர்ச்சியடா
அது
பிரபஞ்சத்தின் சுருக்கமல்ல
அதை அழிக்க முயலாதே
அந்த உரிமை உனக்கு
மட்டுமல்ல எவருக்கும்
இல்லை தெரிந்து கொள்
உயிரை உயிரால் உரிமையாக்கலாம்
உண்மையான கல்வி
எனக்குக் கிடைத்தது
நான் செய்த புண்ணியமா?
இல்லை
அதிஷ்டம் தான்...

**ஆ. மயூரி**
12 விஞ்ஞானப்பிரிவு (2014)

## அறிந்து கொள்ள வேண்டியவை

மிகவும் மரியாதைக்குரியவர் அன்னையே
மிகவும் துயரமானது மரணமே
மிகவும் அழகானது அன்புணர்வே
மிகவும் கொடுமையானது பழி வாங்குதலே
மிகவும் கவலைதருவது செய்நன்றி மறப்பதே
மிகவும் மகிழ்ச்சியானது சிறந்த நட்பே
மிகவும் ரம்மியமானது நம்பிக்கையே
நம்பிக்கையானது நாம் இறைவனிடம் வைக்கும் விசுவாசமே ஆகும்.

(சாயிபாபா)

# இன்சொல் இனிது

மனித வாழ்வானது உயர்ந்த இலட்சியங்களையும், எண்ணங்களையும் கொண்டதாக அமைய வேண்டும். எம்மீது அன்பும் கருணையும் கொண்டு நம்மைக்காப்பவராக கடவுளை நம்மனதில் இருத்தல் வேண்டும். இத்தகைய செயலால் மாசற்ற மனதைப் பெறமுடியும். மாசற்றமனம் நல்ல சொல் ஊற்றெடுப்பதற்கு சிறந்த அடித்தளமாகும்.

பிறருக்கு எந்த வகையிலும் துன்பத்தை ஏற்படுத்தாது மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சொல்லே இனிய சொல்லாகும். மக்கள் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினாலும் அறம் செய்ய வேண்டும். பேச்சின் உயிர் நாடியாக அமைவது இனியவை கூறலாகும். இனிய சொற்கள் பேசுதலும் ஒரு மனிதனுக்குரிய அணிகலன்களாகும். இதனைத் திருவள்ளுவர்.

*"அகன் அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து*
*இன்சொலன் ஆகப்பெறின்"*

மனமுவந்து ஒருவருக்கு ஒரு பொருளைக் கொடுப்பதை விட முகமலர்ந்து கூறும் இனிய சொற்கள் சிறந்ததாகும் என்றார்.

*"வாயே வாழ்த்துகண்டாய்"* என்றார் நாவுக்கரசர் வாழ்த்துவது நாவினது தொழிற்பாடாகும். இனியவை கூறும் பண்பினை வளர்ப்பதில் ஒருவருடைய சமூகச்சூழல் முக்கியமானதாகும். சமூகச்சூழல் நன்றாக அமையும் போது பிள்ளைகளிடம் நற்பண்புகள் நல்ல பழக்கவழக்கங்கள் உருவாகின்றன. இவற்றின் அடிப்படையில் பிள்ளையின் மனதில் நல்ல சிந்தனை எழுகின்றது.

அறிவாற்றலிலும், நற்பண்புகளிலும் சிறந்தவர்களை முன்மாதிரியாகக் கொண்டு விளங்குகின்ற போது நல்ல சிந்தனை ஏற்படுகின்றது. இவை நமது வாழ்விற்கு வழிகாட்டியாக உயர்ந்த நிலையை அடைவதற்கு உதவியாக இருக்கின்றன.

உலகில் இன்பந்தரும் இனிய சொல்லிருக்க வேதனை தரும் கடுமையான சொற்களைக்கூறுவது இனிய கனியை உண்ணாது இனிமையற்ற காய்களை உண்பதற்கு ஒப்பாகும் இதனை

*"இனிய உளவாக இன்னதானகூறல்*
*கனியிருக்ககாய் கவர்ந்தற்று"*

என வள்ளுவர் அழகாக விழுமியப்பண்பால் இனியவை கூறல் பற்றி ஒரு கதையினை பார்ப்போம்.

மலையநத்தம் ஒரு சிற்றூர் இதன் பக்கத்தில் ஒரு பெரிய மலை இருந்தது. மலையை அடுத்து காட்டுப்பகுதி பரந்திருந்தது. அக்கிராமம் பக்கத்து நாட்டு மன்னரின் அரசாட்சிக்கு உட்பட்டிருந்தது. அக்கிராமத்தின் வெளிப்புறத்தில் ஒரு குடிசையில் வேலன் எனும் குடியானவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு அழகிய மகள் இருந்தாள். அவள் பெயர் சுந்தரி, நல்ல தோற்றமும் அழகும் உடையவள். அத்துடன் எவரிடத்தும் இன்கோபமே கொள்ள மாட்டாள். யார் தன் வீடு நாடிவரினும் இனிமையாக பேசி வரவேற்று உபசரிப்பாள்.

சற்று தூரத்தில் குடியானவன் பொன்னன் ஒரு குடிசையில் வாழ்ந்து வந்தான். அவனுக்கும் ஒரே மகள். பெயர் அல்லி. பெயருக்கு ஏற்றகுணம் அவளிடத்தில் இல்லை. எதற்கெடுத்தாலும் கோபிப்பாள். கொடிய சொற்களையே பேசுவாள். புதியவர் எவரேனும் வரின் அவர்மீதும் எரிந்து விழுவாள்.

ஒருநாள் அந்நாட்டு மன்னன் வேட்டைக்காக மலைப்பகுதிக்கு சென்றான் வேட்டையாடி திரும்பும் வழியில் மிகுந்தகளைப்புடன் அச்சிற்றூரை நாடினான். முதலில் பொன்னன் வீட்டின் அருகில் சென்றான். தாகம் அதிகமாக இருந்தது. நீர் கேட்டான். உள்ளிருந்து வந்த அல்லி "இது என்ன சித்திரமா? வருபவர் போகிறவர்களுக்கெல்லாம் உபசரிப்பதற்குத்தான் இங்கு இருக்கிறோமோ? இதுதானா எங்கட்கு வேலை? என்று கடிந்துரைத்து நீர் கொண்டு வந்து தராமல் போய்விட்டாள்.

மன்னன் அங்கு இருக்க மனமின்றி எழுந்து நடந்து பக்கத்தில் உள்ள வேலனின் குடிசைத்திண்ணையில் வந்து அமர்ந்தான். உள்ளே இருந்து வந்த சுந்தரி புதியவரைக் கண்டாள். "ஐயா நீங்கள் யார்? மிகக்களைப்பாக இருக்கிறீர்களே? பருகுவதற்கு மோர் கொண்டு வரட்டுமா? இங்கேயே இருங்கள் இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள். சிறிது நேரத்தில் ஒரு பாத்திரத்தில் மோரும், கையில் ஒரு விசிறியும் கொண்டு திரும்பினாள்.

மன்னன் மோரைப்பருகினான். விசிறியால் களைப்பைப் போக்கிக் கொண்டான். சுந்தரியை வாழ்த்திவிட்டுச் சென்றான்.

அரண்மனை சென்றவுடன் பெரியவர் ஒருவர் மூலம் வேலனுக்கும் அவன் மகனுக்கும் நிரம்பப்பரிசுகளைத் தந்து அனுப்பினான். அவர்களும் பரிசுகளைப் பெற்று சுகமாக வாழ்ந்தனர் இதனை அறிந்த அல்லி தன்நிலைக்கு மனம் வருந்தினாள்.

இன்சொல்லும் உபசரிப்பும் எல்லாதன்மைகளையும் அளிக்கும் என்பது இதனால் நன்கு விளங்கும்.

அன்பும் அருளும் நிறைந்த இனிய உரைகள் பிறருக்கு இன்பத்தைக் கொடுக்கும். பகைவர்களையும் இன்சொல்லால் வெற்றி கொள்ளலாம். "கொதிக்கும் நெர்சையும் குளிர் மொழி அணைக்கும்" என்பது சுவாமி விவேகானந்தரின் பொன்மொழி. ஒருவர் எவ்வளவு துன்பம் தரக்கூடிய வன்சொற்களைப் பேசுகின்ற போதும் அவரிடம் இனிய வார்த்தைகளையே கூற வேண்டும். இன்சொற்களைப் பேசுகின்ற ஒருவர் மகிழ்ச்சிகரமான வாழ்க்கையே வாழ்வர். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவார் என்பதில் ஐயம் இல்லை.

**Y.சுபைதா**
12 வர்த்தகப்பிரிவு (2014)

# நெப்போலியன் பொனபார்ட்

**நெ**ப்போலியன் பொனபார்ட் (15 ஆகஸ்ட் 1769 - 05 மே 1821) அல்லது 1ம் நெப்போலியன் பிரான்ஸ் நாட்டின் படைத்தலைவனாகவும், அரசியல் தலைவனாகவும் இருந்தவன். தற்கால ஐரோப்பிய வரலாற்றில் இவனுடைய தாக்கம் குறிப்பிடத்தக்கது. இவன் பிரெஞ்சுப் புரட்சியில் ஒரு தளபதி, பிரெஞ்சுக் குடியரசின் ஆட்சியாளன், பிரெஞ்சுப்பேரரசன் இத்தாலியின் மன்னன், சுவிஸ் கூட்டமைப்பின் இணைப்பாளன், ரைன் கூட்டாட்சியின் காப்பாளன் ஆகிய பதவிகளை வகித்துள்ளான்.

நெப்போலியன் 1769 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி கோர்சிக்காவில் உள்ள அசாக்சியா என்னும் நகரத்தில் காசா பொனப்பார்ட்டே எனப்படும் குடும்பத்தின் பரம்பரை வீட்டில் பிறந்தான். இவனது பெற்றோர்களுக்குப் பிறந்த எட்டுப் பிள்ளைகளுள் இவன் இரண்டாமவன். இந்த ஆண்டிலேயே கோர்சிக்காத் தீவு செனோவாகக் குடியரசால் பிரான்சுக்கு வழங்கப்பட்டது. இவனுக்கு நெப்போலியன் டிபொனப்பார்ட்டே என்னும் பெயர் இட்டனர். தனது இருபதுகளில் தனது பெயரை பிரெஞ்சு மொழித் தோற்றம் கொடுப்பதற்காக நெப்போலியன் பொனப்பார்ட்டே என மாற்றிக்கொண்டான். கோர்சிக்க பொனப்பார்ட்டே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், தசுக்கள் மூலத்தையுடைய இத்தாலியக் கீழ்நிலைப் பிரபுக்களின் வழிவந்தோர் ஆவர். இவர்கள் 16ஆம் நூற்றாண்டில் லிகூரியாவில் இருந்து கோர்சிக்காவுக்கு வந்தனர். 2012 ஆம் ஆண்டில் நிகழ்த்தப்பட்ட டி.என்.ஏ சோதனைகளின் படி இக் குடும்பத்தின் முன்னோர் சிலர் காக்கேசியப் பகுதிகளில் இருந்து வந்ததாகத் தெரிகிறது. இந்த ஆய்வுகளின் படி ஆப்லோகுரூப்வகை கி.மு 1200 ஆம் ஆண்டளவில் வடஆப்பிரிக்காவில் தோன்றியது. இம் மக்கள் அங்கிருந்து காக்கேசியப் பகுதிகளுக்கும் பின்னர் ஐரோப்பாவுக்கும் சென்றனர்.

இவனது தந்தை கார்லோ பொனாப்பார்ட்டே ஒரு சட்ட வல்லுனர். 1777 ஆம் ஆண்டில் 16 ஆல் கல்லூரியின் அரசவையில் கோர்சிக்காவின் பேராளனாக இவர் பொறுப்பு வகித்தார். நெப்போலியனுடைய இளமைப்பருவத்தில் முதன்மைச் செல்வாக்குச் செலுத்தியவர். இவனது தாய் லெட்சினா ராமோலினோ ஆவார். இவரது கடுமையான ஒழுக்கத்தினால் குழப்படிச் சிறுவனான நெப்போலியனைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார். நெப்போலியனுக்கு யோசேப்பு என்னும் ஒரு பெண்ணுமாக யோசேப்புக்கு முன் பிறந்த இரண்டு பிள்ளைகள் குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிட்டனர். நெப்போலியன் தனது இரண்டாவது பிறந்தநாளுக்குச் சற்று முன்னராக, 1771 யூலை 21 ஆம் திகதி, அசாக்கியோ பேராலயத்தில் திருமுழுக்குப் பெற்றான்.

பிரபுத்துவ, வசதியான குடும்பப் பின்னணியும், குடும்பத்தொடர்புகளும், பொதுவான கோர்சிக்கர்களுக்குக் கிடைக்கப்பெறாத கல்விகற்கும் வாய்ப்புக்களை நெப்போலியனுக்கு அளித்தன. 1779 ஆம் ஆண்டு சனவரியில் பிரான்சுத்தலை நிலத்தில் ஆட்டன் என்னும் இடத்தில் உள்ள சமயப்பள்ளி ஒன்றில் பிரெஞ்சு மொழி கற்பதற்காகச் சேர்ந்தான். மே மாதத்தில் பிரையேன் - லே - சத்து என்னும் இடத்தில் இருந்த படைத்துறை அக்கடமியில் சேர்த்தான். இவன் அதிக கோர்சிக்கத் தொனியுடனே பிரெஞ்சு மொழியைப் பேசியதுடன் சரியான எழுத்துக் கூட்டலையும் அவன் கற்றுக்கொள்ளவேயில்லை இதனால் இவன் அவனது உடன் மாணவர்களது கேலிக்கு உள்ளானான். கணிதத்தில் திறமை பெற்றிருந்ததோடு, வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களிலும் நெப்போலியனுக்குப் போதிய அறிவு இருந்தது.

பிரான்ஸில் கனரக ஆயுதங்களுக்கான அலுவலராகப் பயிற்சி பெற்றான். பிரெஞ்சுப் புரட்சியின் தளபதியாக, பிரான்சுக்கு எதிரான முதலாம் கூட்டணி மற்றும் இரண்டாம் கூட்டணிகளுக்கு எதிரான போர்களை வழிநடத்தியதன் மூலம் இவன் முன்னணிக்கு வந்தான். 1799 ஆம் ஆண்டில் ஒரு சதிப்புரட்சியை நிகழ்த்தி அதன் மூலம் பிரெஞ்சுக்குடியரசின் முதல் கன்சல் ஆகப்பதவியில் அமர்ந்தான். ஐந்து ஆண்களுக்குப் பின்னர், பிரான்சின் பேரரசனானான். 19 ஆம் நூற்றாண்டின் முதற் பத்தாண்டுகளில் ஐரோப்பாவின் ஒவ்வொரு முக்கிய நாட்டுக்கு எதிராகவும் படையெடுத்தான். தொடர்ச்சியான பலபோர் வெற்றிகளினாலும், விரிவான கூட்டணிகளினாலும் அவன் ஐரோப்பாக் கண்டத்தையே தனது மேலாண்மைக்கு உட்படுத்தியிருந்தான். தனது நெருங்கிய நண்பர்களையும், உறவினர்களையும், முக்கிய அலுவலகர்களையும் நியமித்தான்.

1812 இல் இடம்பெற்றுத்தோல்வியில் முடிந்த பிரான்சின் ரஷ்ய ஆக்கிரமிப்பு நெப்போலியனுக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது. இப்படையெடுப்பு நெப்போலியனின் படைகளைப்பெரும் அழிவுக்கு உள்ளாக்கியது. இத்தோல்வியிலிருந்து நெப்போலியனால் மீளமுடியவில்லை. அக்டோபர் 1813 இல் ஆறாவது கூட்டணிப்படைகள் லீப்சிக் என்னுமிடத்தில் நெப்போலியனின் படைகளை முறியடித்து பிரான்சுக்குள் நுழைந்தன. 1814 ஏப்ரலில் கூட்டணி நெப்போலியனைப் பதவியில் இருந்து இறக்கி எல்லாத் தீவுக்கு நாடு கடத்தியது. ஓராண்டிலும் குறைவான காலத்தில் நெப்போலியன் மீண்டு வந்து இழந்த அரசைக்கைப்பற்றினான். எனினும் 1815 ஜூன் 18 இல் வாட்டர்லூ என்னுமிடத்தில் அவன் இறுதித் தோல்வியைச் சந்தித்தான். இதன் பின்னர் அவனது வாழ்நாளின் இறுதி ஆறாண்டுகளும் பிரித்தானியரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த சென்ஹெலெனாத் தீவில் கழிந்தது.

நெடுநாட்களாகவே நெப்போலியனின் மரணத்தின் காரணம் அறுதியிடப்படாமல் இருந்தது. ஆங்கிலேயர்கள் ஆர்செனிக் நச்சு தந்து நெப்போலியனைக்கொன்றிருக்கலாம். என்பது போன்று இருந்த பழைய தோற்றப்பாடுகள் யாவும் தற்செயல் நிகழ்வுகள் எனவும் நெப்போலியன் இறக்கவும் அவனின் வம்சமே இறக்கவும் காரணம் பரம்பரையாக இருந்து வந்த இரைப்பைப்புற்று நோயே என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. நெப்போலியனின் புகைப்படங்கள் அனைத்திலும் அவன் தன் வலக்கையைச் சட்டைக்குள் வைத்திருக்கக் காரணம் வயிற்று வலியால் தான் எனவும் நம்பப்படுகின்றது.

தன்னம்பிக்கை கதைகளைத் தனித்தனியாக கேட்பதை விட நெப்போலியனின் வாழ்க்கையை படித்தால் போதும். நெப்போலியன் ஓர் சரித்திர மாவீரனாகத் திகழ்கிறார். எளிமையான இத்தாலியில் இருந்து குடிபெயர்ந்த குடும்பத்தில் பிறந்தான். நெப்போலியன் ராணுவத்தில் சேர்ந்து கலக்கி எடுத்தான். ஒருமுறை எண்ணற்ற மக்கள் கூடிப்போராடிக் கொண்டிருந்தார்கள். வீரர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு கொஞ்சம் மிஞ்சினால் மக்கள் பொங்கி விடுவார்கள். கண்ணாடி பந்துகளை கச்சிதமாக பீரங்கிகளில் பொருத்தி போராட்டக்காரர்கள் மீது செலுத்தினான். உயிர் இழப்பு இல்லாமல் கூட்டம் கலைந்தது.

வெகுசீக்கிரமே படைத்தளபதியாக உயர்ந்தார். ஆஸ்பதிரியாவின் வசமிருந்த இத்தாலியின் பகுதிகளை பிடித்துக் காண்பித்தான். கிழக்கு தேசங்களை பிடிக்கும் முயற்சியை நெல்சன் தகர்த்தான். பயமென்றால் என்னவென்றே அறியாமல் தன்னை வாரத்தெடுத்துக் கொண்ட நெப்போலியன் உருவத்தில் பார்க்க குள்ளமானவர்.

ஒரு முறை போர்க்களத்தில் வென்றபிறகு வீரர்களை கொண்டாட அனுப்பிவிட்டு நெப்போலியன் தனியாக வேகமாக குதிரையை செலுத்திக்கொண்டு பயணப்பட ஆரம்பித்தான். உற்சாகமிகுதியில் இன்னமும் குதிரையின் வேகத்தை அதிகப்படுத்தும் பொருட்டு கடிவாளத்தை பிடித்து இழுத்தான்.

குதிரையின் வாயில் இருந்து ரத்தம் சொட்டிக்கொண்டே இருந்தது. சிட்டென பறக்க ஆரம்பித்தது. கிடுகிடு பள்ளம் ஒன்று திடீர் என குறுக்கிட்டது. அப்படியே குதித்து விடலாம். குதிரையால் தாவக்கூடிய தூரத்தைவிட ஒரு ஐந்தடி அதிகமாகவே அகலமாக இருந்தது பள்ளம். பார்த்தான் வீரனுக்கு அழகு இப்படி சாவதுதான் என எண்ணிக்கொண்டு முடுக்கினான். பள்ளத்தில் குதிரை தாவி வீழ்ந்த பொழுது அந்த ஐந்தடியை மிதந்து கொண்டு இருக்கும் பொழுதே தாவி அடிகளோடு தப்பித்தான். தன்னை "விதியின் மனிதன்" என அழைத்துக் கொண்டான்.

நெப்போலியன் பிரெஞ்சு புரட்சியில் நாட்டில் ஏற்பட்டு இருந்த கொதிநிலையை பயன்படுத்திக்கொண்டு ஆட்சியை பிடித்துக்கொண்டான். என்றாலும், முதலில் மூன்று பேர் கொண்ட அமைப்பை கொண்டு ஆள்வது போல பாவ்லாகாட்டி விட்டு ஆட்சிப்பீடம் ஏறினான். தானே மகுடத்தை எடுத்து சூட்டிக்கொண்டான். உலக வரலாற்றில் ஏழை ஒருவரின் மகன் ஒரு மாபெரும் நாட்டின் சக்ரவர்த்தி ஆகிற அற்புதம் அன்றைக்கு நிகழ்ந்தது.

ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் மட்டும் உறங்கிய நெப்போலியன் ஆழ்ந்து வாசிக்கிற பழக்கம் உள்ளவன். வாசிப்பே நம்மை பக்குவப்படுத்தும் என்பது அவன் எண்ணம். குள்ளமாக இருந்ததால் அவன் அரசவைக்கு நடந்து வருகிறபொழுது அவன் அணிந்திருக்கும் போர்வான் உரசி இரத்தின கம்பளங்கள் கிழிந்து போகும். பின் இருப்பால் கம்பளம் வைத்த பொழுது உரசிக்கொண்டு தீப்பொறி பறக்க அரசவைக்கு வருவார்.

அவருக்கு தன்னைவிட இரண்டாண்டுகள் மூத்தவளும், இரண்டு பிள்ளைகளுக்கு தாயுமான ஜோசபினை காதலித்துத்திருமணம் செய்து கொண்டார். அவருக்காக உலகம் முழுக்க இருந்து ரோஜா மலர் செடிகளை பரிசாக அனுப்பிவைப்பார். அதன் மூலம் உருவான தோட்டம் மிக பிரமாண்டமானது. ஜோசபைக்கு நெப்போலியன் எழுதிய காதல் கடிதங்கள் தனிக்காவியம். அவன் பிள்ளை பெற்றுத்தர முடியவில்லை என்று விவாகரத்து செய்த பின்னும் பெரிய மாளிகை கொடுத்து அவளுக்காக கண்ணீர் வடித்தான் நெப்போலியன். போர்களில் தொடர்ந்து வென்று கொண்டிருந்த நெப்போலியனின் சொந்தவாழ்க்கை வெகு சிக்கனமானது ஒதிருசெட்ஆடைகள் தன் அறையில் தன் பதினான்கு ஆண்டுகால சம்பளத்தில் வாங்கிய மேசை, நாற்காலி ஆகியவற்றில் தான் தன் வாழ்க்கையை ஓட்டிய எளிமை விரும்பி அவர். இரண்டு வேளை மட்டுமே எளிமையான உணவு சாப்பிடுவார். அரைக்குவளை காபி மட்டும் இரண்டு அல்லது மூன்று வேளை குடிப்பார். வெகு சுறுசுறுப்பாக இருக்கும் அவனின் சின்னம் தேனீ.

பல நாடுகளை வென்ற அவன் செய்த தவறு ரஷ்யாவின் மீதான படையெடுப்பு, தான் கொண்டு வந்த இங்கிலாந்துடன் வியாபாரம் செய்யக்கூடாது என்கிற கண்டமுறையை ஏற்க மறுத்த ரஷ்யா மீது போர் தொடுத்தான். நாட்டையே துப்புரவாக துடைத்து வைத்திருந்தார்கள் மக்கள். ரஷ்ய குளிர் வாட்டி எடுத்தது. உயிரை அப்படியே உருவி எடுத்தது. பல வீரர்கள் சுருண்டு இறந்தார்கள். ஒன்றுமே இல்லாத மாஸ்கோவை

கைப்பற்றினார்கள். பசிக்கு சாப்பிட எதுவுமில்லாமல் குதிரைகளையே வெட்டி உண்ணவேண்டிய நிலைமை. வெறிச்சோடி போன மாஸ்கோவின் தெருக்கள் தான் காத்துக் கொண்டு இருந்தன.

இருந்ததில் பாதி படையை காவுகொடுத்துவிட்டு நெப்போலியன் இன்றுதான் பின் வாங்கினார். அதற்கு பின் நடைபெற்ற போரில் தோற்று எல்லாதீவில் சிறை வைக்கப்பட்டார் அவர். "ரஷ்யக்குளிர் நெப்போலியனை தோற்கடித்தது." என வரலாறு எள்ளி நகையாடுகிறது.

அப்பொழுது நடந்த ஒரு சம்பவம். ரஷ்ய படைகளின் கண்ணில்பட்டு தப்ப முயன்று ஒரு தையல்காரனிடம் சரண் புகுந்தார் நெப்போலியன். "என்னை காட்டிகொடுக்காவிட்டால் மூன்று வரங்கள் தருகிறேன் "என்று சொல்லிவிட்டு ஒரு பெரிய துணி மூட்டைக்குள் ஐஸ்லைக்தப் என கத்திகளை சொருகி பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் ஆகாமல் நெப்ஸ் தப்பிவிட்டார். அதற்கு பின் பிரெஞ்சு படைகள் வந்தன. வரங்களை கேட்க சொன்னார் நெப்போலியன். "முதலில் கடையின் ஓட்டைசரி செய்ய வேண்டும். "முடிந்தது" என்றார் நெப்ஸ் "அடுத்து" என கம்பீரமாக கேட்க, "எதிர்க்கடை தையல்காரனை நாடு கடத்தி விடுங்கள் ஒரே தொழில் போட்டி" எனவும் சிரித்துக்கொண்டே "சரி அடுத்து? எனக்கேட்க நீங்கள் அந்த துணி மூட்டைக்குள் இருக்கும் பொழுது கத்தியால் குத்தினப்ப எப்படி பீல் பண்ணிங்கனு தெரிஞ்சாகணும் "ஹம்ம்" என்ற நெப்போலியன் "கிளம்புங்கள் என படைகளிடம் சொல்லிவிட்டு வெளியேறும் பொழுது சடக்கென்று திரும்பி படைவீரனை பார்த்து தையல்காரனின் தலையில் படக்கென்று துப்பாக்கியை வைக்கச்சொல்லி ஒன்று இரண்டு மூன்று என்றதும் சுட்டுவிடு என்றதும் துப்பாக்கி ஓட்டை தையல்காரன் தலையில் பொய் ஒட்டி கொண்டது "ஒன்...டூ.. த்ரீ என்றதும் அதீத மௌனம் குண்டு வெடிக்கவில்லை வியர்த்துப்போன தையல்காரனை பார்த்து "இப்படிதான் இருந்தது எனக்கு என்றுவிட்டு கிளம்பினான் நெப்போலியன் அந்த அளவுக்கு நகைச்சுவை உணர்வும் அவனிடம் இருந்தது.

எல்பாவில் இருந்து தப்பி வந்தபொழுது மக்கள் மீண்டும் அவன் பின் அணிவகுத்தார்கள். வாட்டர்லூவில் இறுதிப்போர் ஏய் வடிவத்தில் படைகளை நிலை நிறுத்தினான். போரில் வென்று விடுவோம் என்கிற நம்பிக்கை அவனுக்கு இருந்தது. அதற்கு முந்தைய நாள் நல்ல மழை பெய்தது. இவனுக்கு காய்ச்சல் வேறு சொன்ன உத்தரவுகள் தப்பு தப்பாக வீரர்களின் காதுகளில் விழ தோல்வியை தழுவினான் நெப்போலியன். இந்த முறை தப்பிக்க முடியாத ஹெலினாதீவில் கொண்டு போய் தனிமைச்சிறை வைத்தார்கள்.

நாற்பது போர்கள் கண்ட நெப்போலியன் கொண்டு வந்த கோட் ஆப் நெப்போலியன் இன்றைக்கும் பின்பற்றப்படும் அருமையான சட்டம்'. எல்லா மக்களுக்கும் சம உரிமை வழங்கும் அற்புதம் அது எளிமையான மொழியில் அவை எழுதப்பட்டு இருந்தன. நில உடைமை முறையை வேரறுத்து மக்களுக்கு நிலங்களை பிரித்து கொடுத்தான். மதத்தை அரசியலில் இருந்து ஒதுக்கி வைத்தார். நெப்போலியன் காலத்தில் அறிவியலுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. வோல்டாவை பார்த்து நீங்கள் வருடத்துக்கு ஒரு முறை அரசவைக்கு வந்தால் கூட போதும் என்கிற அளவுக்கு நெப்போலியன் தீராத வாசிப்பு ஆர்வம் கொண்டவன்.

எல்பாவில் சிறைவைக்கப்பட்டு இருந்தபொழுது நெப்போலியனுக்கு கொடுக்கப்பட்ட சிறிய அறையில் அவன் எதை தெரியுமா வைத்திருந்தான் எல்லா அடுக்குகளிலும் மொத்தமாக மூவாயிரம் புத்தகங்களை வைத்திருந்தான். அவன் மரணத்துக்கு பிறகு ஆங்கில அரசே அவனை மாவீரன் என்று ஏற்றுக்கொண்டது.

ஒரு சம்பவத்தோடு முடித்தால் நன்றாக இருக்கும். நெப்போலியனின் படைத்தளபதி வேகமாக ஓடி வந்தார். கண்களில் கலக்கம் "அரசே! எதிரி நாட்டுப்படைகள் எல்லாப் பக்கமும் சுற்றி வளைத்து விட்டார்கள். அவ்வளவு தான் என்ற பொழுது நெப்போலியன், "அதனால் என்ன? எல்லா பக்கமும் சுடலாம் என சந்தோசப்படுங்கள்" என்றார்.

"முடியாது என்பது முட்டாள்களின் அகராதியில் உள்ள வார்த்தை" என்ற குள்ளமான உருவம் கொண்ட வானுயர தன் உழைப்பால் எளிய குடும்பத்தில் இருந்து பேரரசனாக உயர்ந்த நெப்போலியனின் நினைவுகள் இன்றும் பேசப்படும் ஒன்று. ஐம்பதாண்டு காலம் மட்டுமே வாழ்ந்த தனி சரித்திரம் அவன்.

**இ. கலைவாணி**
12 கலைப்பிரிவு (2014)

# அறிவிற்கான தேடல்

1) பாம்பிலே நுகரும் சக்தி கொண்ட உறுப்பு - நாக்கு
2) முட்டையிடும் பாலூட்டி - பிளற்றிபஸ்
3) குதிரைப் பாலில் இருந்து தயாராகும் பானம் - டுமிஸ்
4) யூதர்களின் புனிதநூல் - டோரர்
5) இரத்தத்தால் எழுதப்பட்ட மதநூல் - லங்காவீருன் சுந்ரா
6) சூரிய உதயத்தினை முதலில்பார்ப்பவர்கள் - ரஷ்யர்கள்
7) முதல் வானியல் நூல் - சூரியசித்தாந்தம்
8) ஒரு கண்ணைத் திறந்தபடி தூங்குவது - டொல்பின்
9) வேதங்களில் குறிப்பிடாத மிருகம் - யானை
10) சீனப் பெருஞ்சுவரினைக் கட்டியவர் - சீன்.ஹி.கிராம்பி
11) பாக்கு நீரிணையை முதலில் நீந்திக் கடந்தவர் - நவரத்தினசாமி
12) பறந்தபடியே தூங்கக் கூடிய பறவை - அல்பட்ராஸ்
13) உலகின் உயரமான நீர்வீழ்ச்சி - ஏஞ்சல்
14) பின்நோக்கிப் பறக்கும் பறவை - ஹம்மிங்பேட்ஸ்
15) வால் மூலம் சுவாசிக்கும் மீன் - சேற்றுமீன்

# மானிட வாழ்க்கை

காலையில் மலரும் பூக்கள் போல்
அமைதியற்ற உலகதனில் வாழ்பவனே மனிதன்
கருவறையில் பத்து மாதம் போராடி
கடைசியில் இப்பூமித்தாய் வந்தடைந்தோம்
மாலையில் உதிர்வது உறுதியென்று
உணர்ந்தும் பூக்கள் மலர்கின்றன
இறுதிநாள் என்பது வாழ்க்கையில் ஒருநாள்
மனிதனை நேரே சந்தித்துத்தான் தீரும்.

வாழ்க்கை எனும் சுழல் சக்கரத்தில் தினமும்
சுற்றிவிட்ட பம்பரமாய் சுழல்கின்றான் மனிதன்
ஏதோ ஓர் இலக்கின் வழி தொடரும்
அவன் வாழ்நாளில் உள்ள முட்கள் தான் எத்தனை
கள்ளங்கபடமற்ற சிறுகுழந்தையின் உள்ளம் போல்
கடைசிவரை வாழ யார்தான் விரும்புவதில்லை
உறங்கும் விழிகளிலும் நடமாடும் கனவுகள்
எத்தனை உண்டு மனித மனத்தில்

அத்தனை கனவும் நனவாகும் போதுதான்
மீண்டும் புத்துயிர்க்கின்றான் மானிடன்
துயரச்சங்கிலியால் கட்டுண்ட மனிதனவன்
தனக்கென ஓர் பூட்டை வைத்துள்ளான்
வாழ்வின் கதவுகள் அடைபடும் போதுதான்
துவண்டு கிடக்கின்றான் மானிடன்
அன்பு நிறைந்த வாழ்க்கைப் பாதையில்
அறிவு நிறைந்த பயணம் சற்றுப் பயங்கரமே.

விழிகளால் மொழிபேசி வாழ்ந்த மனிதனவன்
கணனியில் பேசும்வழி பிறந்தது சிறப்பானதே
கண்ணீரை துடைக்க ஒருகைக்குட்டை தேடி
காடு மேடெல்லாம் அலைகிறான் ஞானி
நாளைய பொழுதுகளாவது இனிதாக அடையுமா என
ஏங்கி ஏங்கித் தவிக்கிறான் மனிதநேயம் கொண்டவன்
சுதந்திரமாய் வீசும் காற்றாக மனிதன் வாழ்வில்
வசந்தக்காற்று என்று தான் வீசுமோ?

ரோஜா மரத்தின் முட்கள் போன்று மனிதன் பாதம்
படியும் இடமெங்கும் உள்ளது துன்பம்
எவ்வித எதிர்பார்ப்புமின்றித் தினந்தோறும் நடக்கிறதே
மனிதனவன் வாழ்நாள் பயணம்
சலனம் எதுவுமின்றித் தொடங்கும் இந்த
உலகமதில் சஞ்சலமற்ற மனம் தான் எங்குள்ளது?
மரணம் என்பது தொடும் வரை ஓய்வின்றி
வாழும் மானிடனை என்றும் போற்றுவோம்.

**மைதிலி பாக்கியநாதன்**
12 கலைப்பிரிவு (2014)

# Computer Virus

Virus is a word by all lwhen it attachs a human. He falls sick and his system gets up set. when it attacks a computer it looses its function. Slows down and upset its data storage system.

In the computer world the word virus does not mean any germs or organisms. This word Virus is derived from the latin word virus which Means poison and was generaly used in the medical field. Now it is used in the computer field also.

If in the computer there is a programme that would upset the other programmes in the computer. That is called a computer virus. THis virus programme affects the computer memory and transfers its programme to all other programmes. There are two types of computer virus.

i) Dangerous Virus ii) Harmless Virus

Generally harmless virus will bloch the memory of the computer but will not affect the programme. The virus will bring about the following problems.

i) Destroy files
ii) Reduce computer efficiency
iii) Bloch obtaining copies of programme
iv) Computer will not function

Certain kinds of computer virus.

i) Boot sector virus
ii) Pertition virus
iii) File infector
iv) Trajan house virus
v) Worms
vi) Droppers

Name of certain computer virus.

i) Bed boy
ii) Blood sugar
iii) Catman
iv) CIH
v) Melissa
vi) find me

Names of certain anti-virus vaccine programme.

i) Watch day
ii) Dr.Solomon's tool kit
iii) RCDAC
iv) NOrton anti-Virus
v) Pc-cillin

Methods of preventing virus infection.

1) Purchasing of programmes from authorised institutions.
2) Computer should notbe allowed to be used by unknown persons.
3) Avoid using floppy disc u;sed by others.
4) Position of anti-virus programmes.
5) Usingstandard anti-viral vaccine programmes.
6) Using virus guard in hard disk online.
7) Avoid using non scanned programmes in system
8) VIrus scanning of system monthly.

**K.Sathursa**
12 Science (2014)

# குறுக்கெழுத்து

**இடமிருந்து வலம்**

1) கோல்டன்கீ கிறிடிட்காட் கம்பனியின் முறிவு காரணமாக இலங்கை வங்கியின் கீழ் செயற்பாடுகளை கொண்டுவரப்பட்ட வங்கி இதுவாகும்.

2) கிரயம் வருமானம் உழைக்கப் பயன்படுத்தும் போது இவ்வாறழைக்கப்படும்.

3) இயற்கை தேச சூழலில் கலசாரத்திற்கென புவிமாநாட்டுக்குரிய அங்கத்துவ நாடுகளினால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை.

4) வருமானமொன்று எப்போது கிடைக்கப்பெறுகின்றதோ அன்றே அது ஈட்டப்பட்டதாக கருதி கணக்குகளில் பதிவு செய்ய வலியுறுத்தும் எண்ணக்கரு (தலைகீழாக)

5) எந்த நாட்டின் பிரதமர் தற்போது சாக் அமைப்பின் தலைவர்.

6) சூழலுக்கு மாசு ஏற்படாதவாறு வழங்கப்படும் உற்பத்திக்கு வழங்கும் பெயர்.

8) கிடைச்சேர்க்கை முறையில் உருவாக்கப்பட்ட மத்திய கிழக்காசிய நாடுகளின் மையம்.

12) உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற கூரியர் சேவை.

13) தனிநபர் வருமானம், சொத்து மீது ............... வரி அறவிடப்படுகிறது.

**மேலிருந்துத கீழ்**

1) அதே நேர மொத்த தீர்ப்பனவு முறைமை, பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமை ஆகியன பொதுவாக லங்கா...... முறைமை என அழைக்கப்படும்.

2) காப்புறுதி செய்தவர்களை பாதுகாப்பதற்கான நிதியம் ஒன்றை நிறுவுவதற்காக காப்புறுதி கம்பனிகளின் ஆண்டுக்குரிய வருமானம் மீது விதிக்கப்படும் வரி (தலைகீழாக)

6) உற்பத்தியாளர் தமது பண்டங்களை போட்டிப் பண்டங்களில் இருந்து வேறுபடுத்தி காட்டப்பயன்படும் அளவீடு.

7) சுனாமியால் பாதிக்கப்பட்ட பேரளவு முயற்சிகளுக்கு உதவுவதற்காக இலங்கை மத்திய வங்கியால் ஆரம்பிக்கப்படும் கடன்திட்டம்.

9) பொருளியல் மூலாதார பிரச்சினையாக குறிப்பிடப்படுவது.

10) நுகர்வோர் தேவை விருப்பங்களை திருப்திப்படுத்துவதற்கான உற்பத்தியின் ஆற்றல் தொடர்பான நுகர்வோர் மதிப்பீடு.

11) பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியின் பெயரில் பயன்படுத்தப்படும் பதம்.

12) முற்கூட்டியே இலகுவாக நிச்சயிக்க முடியாத வேகமாக மாற்றமடையும் ஒரே விதமானதும் பகுதி கட்டமைப்பு தீர்மானம் எடுப்பதற்கு பயன்படும் தகவல் முறைமை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 செ | லா | ன் | | | ஸ் | | |
| க் | | ப | | | 2 செ | ல | வு |
| கு | | 3 கி | யோ | ட் | டோ | | |
| ய | றி | 4 தே | | 5 இ | ந் | தி | யா |
| ர் | | 6 ப | 7 சு | மை | | ம | |
| | | ண் | சா | ரு | S | நு | |
| | | ட | ன | 9 அ | S | 10 பெ | 11 P |
| 8 ஒ | பெ | க் | | | 12 D | H | L |
| | | கு | | | | | C |
| | | றி | | | 13 நே | ர் | |

**K. சுவஸ்திகா**
12 வர்த்தகப்பிரிவு (2014)

# விலங்கு உடைத்த பாரதி

**வீ**றுநடையும், கூரிய பார்வையும், மிடுக்கான நடையும், முறுக்கு மீசையும், எடுப்பான தோற்றமும் கொண்ட பாரதியின் நெஞ்சக்கனவில் உறைந்திட்ட அடிமைத்தளையும், சுதந்திர வேட்கையும் காலா காலத்தில் வெற்றி நடை பயின்றது.

அன்றைய காலத்திலே ஆண்களுக்கு மட்டும் தான் முதலிடம் கொடுக்கப்பட்டது. பெண்கள் அடிமைத்தனமாக அடக்கு முறையிலே தான் வாழ்ந்தார்கள். பெண்ணாக ஏன் பிறந்தோம் என ஏங்கித் தவித்த பெண்கள் எத்தனையோ இது விதமாக ஏது சிந்தனையுமின்றி அறிவு இல்லாத பூச்சிகளாக இருந்தனர். காரணம் கல்வி அறிவு கற்றதில்லை. மற்றவர்களோடு பேசிப்பழகியதில்லை. வெளி உலகைப் பார்த்ததில்லை. இருண்ட உலகத்திலே வாழ்ந்தனர். இந்த இருண்ட உலகத்திற்கு ஒளிகொடுத்தார் பாரதி.

ஒரு சிட்டுக்குருவி எப்படி சிறகடித்து சுதந்திரமாக பறந்து திரிந்து வாழ்கின்றதோ அவ்வண்ணம் பெண்களும் சிட்டாய்ப் பறக்க வேண்டும் என்ற எண்ண அலைகள் அவரின் மனதில் தோன்ற அவர் குரல் ஓங்கி ஒலித்தது. ஒலி உலகெங்கும் பரவியது. பேச்சு வடிவிலும் , பத்திரிகை வடிவிலும் இடத்திற்கு இடம் எடுக்கப்பட்ட குரல் மக்கள் மனதிலிடம்பிடித்தது. கல்லும் கனியும் என்பார்கள். அவ்வண்ணம் கற்றோர் மனதிலும் கல்லோர் மனதிலும் எண்ண அலைகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்ததால் சீர்திருத்த வாதிகள் பலர் திகழ ஆரம்பித்தனர்.

வீராவேசத்துடன் பொங்கியெழுந்த பாரதியின் குரல் கேட்டு அடுக்கணையில் முடங்கிக் கிடந்த பெண்களெல்லாம் வெற்றிநடையோடு வெளி வந்தனர். காலங்கள் புரண்டன. பாரதியின் தமிழையே கரைத்துக் குடித்தாற்போல் கவிதைகள். உரைநடைகள் இவை மட்டுமல்ல நல்லாசிரியருமாய் பாரதி திகழ்ந்தார். தமிழ்ப் பத்திரிகைத் துறை, பிரதி நிதித்துவம் பெற்ற பாரதி சுதேச மித்திரன், சக்கர வர்த்தினி, இந்தியா என்ற இப்படிப் பல வித பத்திரிகைகளை வெளியிட்டார். அது மட்டுமன்றி ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் அடக்கு முறைகளை தகர்த்தெறிய தமிழர் மத்தியில் ஆங்கில அறிவு வேண்டும். சுதந்திரச் சங்க நாதம் முழங்க வேண்டும் என்று "பால்பாரத்" எனும் வார இதழை வெளியிட்டார். பாரதியின் ஒவ்வொரு கனவும் ஒவ்வொரு எண்ண அலைகளிலும் ஒவ்வொரு புதுமை நிறைந்திருந்தது. சாதி,மத, பேதமின்றி சமத்துவமாய் வாழ வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர் கண்ட கனவிலே புதுமைப் பெண்ணைக் கண்டார். ஆணுக்கு சரி நிகர் பெண் என்று நிலை நிறுத்தினார். கல்வியறிவிலும் சரி கடின உழைப்பிலும் சரி பெண்கள் சளைத்தவர்களல்ல. தேசத்தையே கட்டியெழுப்பும் தேசாதிபதிகளாக பெண்கள் உருமாறினர்.

20ம் நூற்றாண்டின் விடிவெள்ளியாய் அடி எடுத்து வைத்த பாரதியின் உரிமைக்குரலில் எதிரொலிதான் இன்று சுதந்திரப் பயணத்திலே துப்பாக்கி ஏந்தும் பெண்களின் நெஞ்சுரம் தான் என்னே... என உலகையே வியந்து நின்றது.

பச்சிளம் குழந்தை கூட பாசறையர் கருவறை கடந்து வர போராட்டம். கடந்து விட்டால் பாசத்தின் போராட்டம். ஆறினைக் கடந்து விட்டால் கல்வி எனும் போராட்டம். கற்றபின் கற்றாய்ந் தொழுகுதலில் போராட்டம். கற்ற பயனாம் முயற்சியெனும் போராட்டம், தேடல் எனும் போராட்டம் இவ்வாறு வாழ்க்கையில் எத்தனையோ

போராட்டம். போராட்டம், போராட்டம். போட்டி போட்டு வாழ வேண்டும் என்று போராட்டம். அறுபது கடந்து விட்டால் மரணத்திலே போராட்டம். ஆனால் இவை எல்லாவற்றையும் விட மேலானது பாரதியின் தணியாத தாகமாய் மலர்ந்த சுதந்திரப் போராட்டம். ஆண்களும் பெண்களும் சுதந்திரப் பறவைகளாக வாழ வழிகோலியது அவை மட்டுமன்றி ஒருவனுக்கு ஒருவன் அடிமை இல்லை ஆறறிவு படைத்தவன் எவனும் தரணியிலே சுதந்திரம் படைத்தவன் . எளிமை, பொறுமை, இரக்கம் , கண்ணியம், கட்டுப்பாடு என்று இலக்கணம் வகுத்த பாரதி சுதந்திர வேட்கையை மக்களுள் திணித்து மக்கள் மனதை தட்டி எழுப்பி அடிமை விலங்கை உடைத்தெறிந்தார். 20ம் நூற்றாண்டில் தன்னிகரில்லாத் தலைவனாய் விளங்கிய பாரதி எட்டய புரத்திலே பிறந்தார். அவரது வாழ்வு 39 ஆண்டுகள் நிறைந்த போதிலும் தன் வாழ்நாளில் தமிழுக்கு உயிர் கொடுத்து உரு புனைந்து உரமேற்றி மறைந்தார்.

**வி. பிரியங்கா**
12 கலைப்பிரிவு (2014)

# தெரிந்து கொள்வோம்.

1) உணவைக் கழுவி உண்ணும் விலங்கு - ரெக்கூன்
2) கால்களில் செவியுள்ள பூச்சி - வெட்டுக்கிளி
3) அதிகம் கரும்பு பயிரிடப்படும் நாடு - கியூபா
4) புலிகள் அற்ற நாடு - ஆபிரிக்கா
5) நீந்தத் தெரியாத மீன் இனம் - தோட்ட விலங்கு
6) முதலில் மருத்துவமனை தோன்றியநாடு - ரோம்
7) ஆழமான அகழி - மரியானா 25640 அடி
8) நின்று கொண்டு முட்டையை அடைகாக்கும் பறவை - பென்குயின்
9) முதலில் நாணயங்களில் பொறிக்கப்பட்டவர் - அலெக்ஸ்சாண்டர்
10) ரஷ்யாவை நவீன நாடாக மாற்றியவர் - மகாபீற்றர்

# International Marketing Introduction

So you decided you want to sell your product over seas. The world is becoming a smaller place because of technology (the internet) and social mobility. That is people are traveling more and are Ramiliar brands arounds the world and you can identify similar segment in overseas markets so lets go global.gto global.

## So why go Global

* competition within your national is becoming too intense so you decide to push sales in overseas markets.
* You products with inyour national Markets are reaching the end of lthe life cycle so you wish to push it into national markets.
* Sales and profit are generally declining in national markets.
* You wish to become a global player
* International Marketing Environment or

There are a number of steps that need to taken befor you decide to enter international markets.

Ananlyze the international marketing enviroment APEST / STER an a lysis needs to be conducted on the market you enter to assess whether it is worth while or not , Let's briefly look at some factors that may influence an international decision.

## Political factors

1) The political stability of the nation.
2) Monetary regulations will the seller be paid in a currency that they value or will payments only be accepted in the host nation currency?

## Economical factors

1) Consumer wealth and expenditure within the country.
2) National interests and inflation rate.
3) Are Quotas imposed onyour product.
4) Does the goverment offer subsidies toi national players that make it difficult for you to compete.

## Social factors.

**Language :** will Language bea barrier to communication for you? Does your host nation speak your national language? what is the meaning of your brand name in your host country's language?

**Customs** ⇒ What customs toyou have to be a ware of with in the country? This is important you need tomake sure you do not off-end while communicating your message.

1) Social factors - what are therole of women and family within a society.
2) Religion - How does religion affect behaviour.
3) Values - What are the values and attitudes of individuals with in the market.

## Technologycal factors

1) The technological in frastructure of the market.
2) Do all homes have access to energy (electricity)
3) Is there an Internet infrastructure Does this infrastructure support broad band or dial up?
4) Will you systems easily integrate with your host country's.

## Market entry methods

After assessing the environment in your selected country how doyou decide which are the best countries to enter? paid wood (193) suggest that before. you enter an overseas market there are six factors that need to be considered.

**Speed** - How Quickly do you wish to enter your selected Market?
**Costs** - What is the cost of entering that market?

**Flexibilify** - How is easy is it to enter / leave your chosen market?

**Risk factor** - what is the political risk of entering the market? What are the competitive risks? How competitive is the market.

**Pay back period** - When do you wish to obtain a return from entering the market? Are there pressures to break even and return a profit within a certain period.

## Long term objectives.

What does the organization wish to achieve in the long term by operating in the foreign market? Well they establish a presence in that market and then move onto othrs?

## Trading overseas

There are a number ways an organization can stort to sell their products in international markets.

**1) Direct export**

The organization produces their product in their home. market and then sells them to customers overseas .

**2) Indirect export**

The organizations sells their product to a third party who then sells it on with in the foreign market.

**3) Licensing**

Another lessrisky market entry method is licensing Here the licensor will grant an organization int he forign market a license to produce the product use the brand name etc. in return that they will receive a royalty payment.

**4) Franchising**

Franchising is another from of licensing Here the organization puts together a package of the "successfull" ingredients that made them a success int heir home market and then fronchise this package to over sea investors. The Fronchise holder may help out by providing training and marketing the service or product Mc Donalds is a popular example of a fronchising option fore expending International markets.

**5) Contracting**

Another of form on market entry in an overseas market which involves the exchange of ideas is contracting. The manufacturer of the product will contract out the production of the product to on other organization to produce the product on their be half clearly contracting out saves the organization exporting to the foreign market.

**6) Manufacturing abroad**

The ultimate decision to sell a board is the decision to establish a manufacturing plant int he host country. They goverment of the host country may give the organization some from of tax advantage becouse they wish to attract in ward investment to help create. employment for their economy.

**7) Joint Venture**

To share the rish of Market entry into a foreign market two organizations may came together to from a company to operate int he host country. The two companies may share knowledge and expertise to assist them in the development of company of course profits will have to be shared out also.

**S.Selvanam**
12 Commerce (2014)

# அமெரிக்கா பாலைவனமொன்றில் ஒளி ஊடுருவும் மர்மப்பொருள்

**அ**மெரிக்காவின் அரிசோனா பிராந்தியத்தின் பாலைவனப்பகுதியில் ஊதா நிறத்திலான திரவத்தன்மையுடன் கூடிய கோள வடிவிலான ஒருவகை பதார்த்தங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இனம்காணப்படாத இந்த பதார்த்தங்கள் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவரை உலகின் எந்தவொரு பகுதியிலும் கண்டுபிடிக்கப்படாத இந்த பதார்த்தங்கள் என்னவாக இருக்கும் என்பது குறித்து கேள்விகள் எழுந்தன.

ஒருமுறை இப்பகுதியை சுற்றிப்பார்ப்பதற்காக வந்த சுற்றுலாப் பயணிகள் திரிந்துகொண்டிருக்கையிலேயே இந்த திரவத்தன்மையான சிறிய பந்து வடிவிலான பதார்த்தங்களைக் கண்டுள்ளனர். நாம் அந்த பிரதேசத்தை புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்கையிலேயே எதிர்பாராதா விதமாக இந்த காட்சியைக் கண்டோம். சூரிய ஒளிபட்டு இவை நன்றாக மின்னிக்கொண்டிருந்தன. இதற்கு முன்னர் இவ்வாறு நாம் எவருமே கண்டதில்லை என்று தெரிவித்தனர்.

இவை ஏதோஒருவகையிலான திரவத்தினால் நிரம்பியிருந்தன. ஒளி ஊடுருவும் தன்மையைக் கொண்டிருந்தன. அந்த பாலைவனப்பகுதியில் காணப்பட்ட ஏனையவற்றிலிருந்து இவை முற்றிலும் மாறுபட்டவையாகவே இருந்தன என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து ஆராய்ச்சியாளர்களிடம் கேட்டபோது அவர்களால் கூட இது என்ன என்று சரிவரக் கூறமுடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றன. செய்தியாளர்களின் கருத்தின்படி இவை நீர்த்தன்மையை உடைய ஒட்டும் தன்மையுள்ள கண்ணாடிப்பந்து போன்று ஒருவகைப் பொருள் என்றும் இதனை பிழியும் போது ஒருவித திரவம் வெளியேறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

டக்ஸன் தாவரவியல் பூங்கா பிரச்சார இயக்குனரான பாலின் பூரோ என்பவரின் கருத்தின்படி தான் இது தொடர்பாகத் தாவரவியலாளர்களிடம் விசாரித்த போது இவை இயற்கையான உரமாகும். ஒருவகை ஒட்டும் தன்மை கொண்ட பூஞ்சை இனமாக இருக்கலாம் என்று கூறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மற்றும் சிலரின் கருத்தின்படி இவை மரங்களுக்கு நீரை வழங்குவதற்காக போடப்படுகின்ற சிறிய நிறமிக்க நீர்த்தன்மையுள்ள ஒரு தயாரிப்பு பொருள் ஆகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. பாலைவனத்தில் பெரும் தொகையில் இவற்றை இடுவதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இவை தொடர்பான ஆராய்ச்சிகள் இன்றும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

**சு.யாழினி**
12 விஞ்ஞானப்பிரிவு (2014)

# தரணியில் தலைமகளாகு

*திரி திரி திரியென்று திரிந்து*
*படி படி படியென்று படித்து*
*G.C.E (O/L) இல் ஆல் எவ் (f) எடுத்த பின்*
*இறைவனை வேண்டுதல் செய்வார்.*

*காலையும் மாலையும் ரியூசன்*
*இரவினில் எப்பவும் ரிவிசன்*
*றோட்டினில் இருப்பவராய் செல்லுவது டவுன்*
*மாணவர் நிலையினை பாரீர்.*

*உன் கவனத்திலே!*
*கற்றிடும் வேளையில் கவனம்*
*வெற்றியில் என்றும் கவனம்*
*பற்றுடன் பாடத்தை உற்று நோக்கியே*
*மற்றதை மறந்திடு மகளே!*

*குருவின் மேல் பக்திவை மகளே*
*திருவருள் தேடிநீர் தினமும்*
*தருகின்ற பயிற்சிகள் தவறாது செய்து நில்*
*தரணியில் தலைமகளாய் ஆவாய்.*

**தே. மேரிஆன் நிரஞ்சா**
12 கலைப்பிரிவு (2014)

**இருந்தும் பயனற்றவை**

**புண்ணிய தலங்களுக்குச் சென்று வராத கால்கள்**
**ஆண்டவனைக் குனிந்து வணங்காத தலை,**
**கெஞ்சிக் கேட்பவனுக்குக் கொடுத்து உதவாத கைகள்,**
**நல்லவர்களின் அறிவுரைகளை கேட்டு கிரகிக்காத காதுகள்,**
**எடுத்த காரியத்திற்கு உழைக்காத உடல் ஆகியவை**
**இருந்தும் பயனற்றவை.**

**(விதுரநீதி)**

# லீப் வருடம்

நாம் பயன்படுத்தும் கலண்டர் கிரகொரியன் (Gregorion calender) ஆகும். இதன் கால அளவீட்டில் ஒரு வருடம் என்பது 365.2425 நாட்களைக் கொண்டது. நாம் பொதுவாக 365 நாட்களை ஒரு வருடமாக கருதும்போது ஒரு வருடத்தில் 0.2425 நாட்களை தவிர்க்கின்றோம். இவ்வாறு நான்கு வருடங்கள் எனும் போது 4 x 0.2425 = 0.917 நாட்களை தவிற்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் நான்கு வருடத்திற்கு ஒருமுறை ஒரு நாளை கூட்டுவதன் மூலம் 366 நாட்களைக் கொண்ட லீப்வருடமாக இந்த ஆண்டைக் கருதுகின்றோம்.

இங்கு நாம் கூட்டவேண்டிய 0.97 நாட்களுக்குப் பதிலாக ஒரு நாளை கூட்டுவதன் மூலம் 1-0.07 = 0.03 நாட்களை கூடுதலாகக் கூட்டியுள்ளோம். இவ்வாறு நூறு வருடத்தைக் கருதுவோம் எனின் 25 லீப் வருடங்கள் இந்த 100 வருடங்களில் வருவதால் 25 x 0.03 = 0.75 நாட்களை மேலதிக நாட்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனை தவிர்ப்பதற்காகவே 100 வருடத்திற்கு ஒரு முறை ஒரு நாளை கூட்டாது விடுகின்றோம். ஆகவே 100 வருடத்திற்கு ஒரு முறை 365 நாட்களைக் கொண்ட சாதாரண ஆண்டாக அமைகின்றது.

ஆனால் 100 வருடத்திற்கு ஒருமுறை ஒரு நாளை கூட்டாது தவிர்ப்பதால் 1 - 0.75 = 0.25 நாட்களை மேலதிகமாக உள்ளது. இவ்வாறு 300 வருடங்களில் 4 தடவைகள் 4 x 0.25 = 1 நாள் கூடுதலாக வருவதால் 400 வருடத்திற்கு ஒரு முறை ஒரு நாளைக் கூட்டி 366 நாட்களைக் கொண்ட லீப்வருடமாகக் கருதுகின்றோம். இதனையே நான்கு வருடத்திற்கு ஒருமுறை லீப்வருடம் என்றும் அவ்வருடம் நூற்றாண்டாயின் 400 மடங்காக இருப்பின் மட்டுமே லீப்வருடம் என்று வரையறுக்கின்றோம். இந்த மேலதிக நாள் மாசிமாதம் 29ஆவது நாளாக வைக்கப்படுகின்றது.

2012ம் ஆண்டு லீப்வருடமாக இருக்கின்றபோதும் 2100 ஆம் ஆண்டு லீப் வருடமாக இல்லாமலும் 2400 ஆம் ஆண்டு லீப் வருடமாகவும் அமையவுள்ளது.

**A.லக்சனா**
12 கணிதப்பிரிவு (2014)

**கைவிடக்கூடாத குணங்கள்**

விதுரநீதி மனிதன் சத்தியம், தானம், சோம்பலின்மை, பொறுமையின்மை, தைரியம் ஆகிய ஆறு குணங்களையும் ஒரு போதும் எந்த நிலையிலும் விட்டு விடக் கூடாது.

(நபிகள் நாயயகம்)

# மர்மக்கடல் பெர்மியூடா

அமெரிக்காவின் கரிபியன் கடற்பிரதேசத்தில் காணப்படுகின்ற பெர்மியூடா முக்கோணப்பிரதேசத்தில் இடம்பெறும் மர்மமான செயல்களுக்கு இன்னமும் காரணங்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்றன. அந்த அளவுக்கு பெர்மியூடா முக்கோணப்பகுதியில் கப்பலக்ள் விமானங்கள் காணாமற்போவது உலக மக்களை பெரும அர்ச்சிக்குள்ளாக்கி யிருந்தது எனலாம்.

விமானங்களையும், கப்பல்களையும் விழுங்கும் கடற்பரப்புத்தான் பெர்மியூடா முக்கோணப்பகுதி என்றழைக்கப்படுகின்றது. அமெரிக்காவுக்குத் தெற்கே அத்திலாந்திக் கடற்பகுதியிலுள்ள பெர்மியூடா அமெரிக்காவின் மியாமி மற்றும் போட்டோரிகோவில் லான்ஜீவன் ஆகிய பிரதேசங்களை மானசீகமாக இணைப்பதனால் இந்த முக்கோணக் கடற்பரப்பு கிடைக்கின்றது. இதனாலேயே பெர்மியூடா முக்கோணம் என்கின்றனர். இக்கடற்பரப்பு பேய்க்கடல் என்றும் அழைக்கப்படுகின்றது.

இது பற்றி நாடுகாண் பயணியான கிறிஸ்தோபர் கொலம்பஸ் வெளியிட்டிருந்த மகிப் பழமையான தகவலொன்றில் “செர்காஸோ” எனும் கடலை கப்பலில் கடந்து சென்று கொண்டிருக்கும்போது அக்கடலில் நிறைந்திருந்த கடற்களைகள் தமது கடற்பயணத்திற்கு பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தியிருந்தது என்று குறிப்பிட்டிருந்தார். அத்தோடு இக் கடற்பிரதேசத்தினூடாக வான் வழியாக விமானங்களில் பயணித்த விஞ்ஞானிகளும் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதாக அனுபவரீதியாக ஒரு விஞ்ஞானி எழுதியுள்ளார்.

இப்பிரதேசத்தில் நடக்கின்ற அனைத்து விபத்துக்களுக்கும் விமானிகளினதும், மாலுமிகளினதும் கவனயீனமே பிரதான காரணமாகத் திகழ்கின்றது என்று ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். சிலர் கடற்பரப்புக்கு மேலாக வானில் ஒரு துளை இருப்பதாகவும் கூறுகின்றனர். இதற்கு அமெரிக்காவைச் சேர்ந்த “கபாஷனி” என்ற விமானி தகரக்கட்டுப்பாட்டுப் பிரிவினருடன் கடைசியாகப் பேசியது சிறந்த எடுத்துக்காட்டாகும். வானத்தில் ஏதோ நடக்கின்றது! வானம் திறந்து கொண்டது என்பதே அவர் பேசியது அதன் பின்னர் அவரிடமிருந்து ஒரு செய்தியும் வரவில்லை என்கின்றனர். தரைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் இது பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் இதுவரை கண்டறியப்படாத சில இரசாயனச் செயற்பாடுகளினால் வானில் அவ்வாறானதொரு பாரிய துளை ஏற்படலாம் என்ற கருத்தும் நிலவுகின்றது.

அத்துடன் அக்கடற்பரப்பில் அதிகளவு மிதேன் கலந்திருப்பதனால் திடீரென நீரில் பள்ளத்தாக்குகள் ஏற்படுவதாகவும் நம்புகின்றனர். அத்தோடு வேற்றுக்கிரக விமானங்கள் இந்த பெர்மியூடாக கடற்கப்பல் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் இதனால் இவ்வழியே பயணிக்கின்ற கப்பல்களும், விமமானங்களும் அவற்றிலுள்ள காந்தங்களினால் ஈர்க்கப்படுவதாயும் இருக்கலாம் என்றும் கருத்து தெரிவிக்கின்றனர். 1945இலிருந்து இன்றுவரை சுமார் 130 விமானங்கள் காணாமற் போயுள்ளன. இதில் 1949 - 1987 வரை மட்டும் காணாமல் போன விமானங்களினதும், கப்பல்களினதும் எண்ணிக்கை 41 ஆகும். இக்கடற்பரப்பில் இன்றுவரை 60 இற்குட்பட்ட கப்பலக்ள் காணாமல் போயுள்ளன.

பழங்கால யப்பானியர்கள் கடலுக்குள் இருக்கும் ட்ராகன் எனும் இராட்சத மிருகம் செய்யும் நாசகார வேலையே இதற்குக் காரணம் என்று கருதினர். ஆனால் அதையும் தாண்டி இவ்விரு பிரதேசங்களையும் ஒப்பிட்டு விஞ்ஞானிகள், புவியியல் ஆராய்ச்சியாளர்கள், பௌதிகவியலாளர்களும் காணாமல் போவதற்கான சில விஞ்ஞான ரீதியான முடிவுகளுக்கு வந்துள்ளனர்.

இதுவரை ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின்படி பெர்மியூடா பகுதியில் நடக்கின்ற விபத்துக்களுக்கு அப்பகுதியின் சூழல் சமநிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்களே காரணம் எனக் கூறப்படுகின்றது. அத்தோடு இவ்விரண்டு முக்கோணக் கட்டமைப்புக்களும் பூமியின் நேரெதிர்ப் பகுதியில் அமைந்துள்ளன. இரண்டு பகுதியும் ஒன்றுக்கொன்று ஒத்துப்போவதில்லை. இதனால் விமானங்கள் பயணிக்கும்போது திசையில் குழப்பம் ஏற்படுகின்றது. மேலும் இப்பகுதியில் இருக்கும் காந்தவிசை காரணமாகக் குழப்பம் ஏற்படுகின்றது. மேலும் இப்பகுதியில் இருக்கும் காந்தவிசை காரணமாக கப்பல்கள், விமானங்கள், கடலுக்குள் ஈர்க்கப்படுவதாயும் இருக்கலாம் என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

மேலும் ஒருசிலர் இவ்விரண்டு பகுதிகளும் குளிர்கடலும், வெப்பக்கடலும் சங்கமிக்கும் பகுதி ஆகும். வெப்ப ஏற்ற இறக்கம் காரணமாக இங்கு மின்னோட்டம் ஏற்படலாம். வட,தென் துருவ விசையின் மீது இம் மின்விசை செயற்பாடு ஓரளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தவும் கூடும்.

இதனால் அந்த இடத்தில் காந்தவிசை அதிகளவு இருக்கும். எனவே எவ்வளவு கடினமான பொருளையும் சுலபமாக ஈர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் எனக் கூறுகின்றனர்.

இந்தக் காந்தவிசை ஈர்ப்பினால் அவ்வழியாக பயணிக்கும் விமானத்தின் அல்லது கப்பலின் பயணிக்கும் திசை முற்றிலும் வேறுபடக்கூடும். இவ்வாறான ஒருநிலைமையின் போது சிலர் தம்மை அறியாமலேயே தரையை நோக்கி செல்வதாய் எண்ணி ஆழ்கடலினுள் செல்கின்றனர்.

பௌதிகவாதிகளும், விஞ்ஞானிகளும், புவிகாந்த மண்டலத்தின் செறிவினாலேயே கடலினுள் கப்பல்களும், விமானங்களும் ஈர்க்கப்படுகின்றன என்கின்றனர். புவியியல் அறிஞர்களோ அந்த ஆழமான கடற்பரப்பில் அடிக்கடி நில நடுக்கம், எரிமலை வெடிப்புக்கள் ஏற்படுவதனால் இவ்வழியில் பயணிப்பவை சங்கமிக்கலாம் என்கின்றனர். இன்னும் சிலர் இது வேற்றுக்கிரகவாசிகளின் செயலாகவும் இருக்கலாம் என எண்ணுகின்றனர். எது எவ்வாறு இருந்தாலும் விமானங்கள் , கப்பல்கள் “காணாமற்போவது” தொடர்ந்து கொண்டிருப்பது உண்மை ஆகும்.

**ம.சோபனா**
12 விஞ்ஞானப்பிரிவு (2014)

# Here is another love story behind Tajmahal

Most of us knw about Tajmahal, the symbol of the strong feeling of affection Love. But many of us do not know the true love which didn't come to light much about Harin with Dilothi. A very few know this hidden fact.

Shajahan on the loss of his beloved wife thought of arection of a symbol of love in remembrance of her. He requested his citizens to drawup a token of proposed building which could reflect his feelings. On hearing this an artist by the name of Harin who kept Dilothi his lover and later wife in mind and with strong feeling of affection in her drew up a figure plan exhibiting his love feelings. The plan drawn by Harin was not accepted by king Shajahan as it didn't reflect the feeling of sadness. Harin enjoyed the most pleasure and merriness of love with Diothi, he has had no opportunity of thinking or feeling about sadness of departure of a lover. Harin suffered very badly of his inability to drawup a plan which could be accepted by king Shajahan. The final date for Submission was also nearing. Recently married young lady Dilothi. Felt the suffering of her husband. She determined to exhibit the uncountable love towards her husband and with strong idea that her husband should achieve his goal.

Her mind displayed the truth "One who sufferes like the king only can draw the plan"

In the evengin with anxiousness to see his affectionate lover Harin's legs moved towards his house. Eyes searched for Dilothi. The room of the artist was kept neatly arranged and a printing paper available on the table together with a letter. Dilothhi drowned herself in Jamuna river.

Harin cried and cried as If he had lost his life. He felt as world burst into pieces. The sorrowful flame burnt his heart and with tribute of tears in his eyes. Harin drew up castle sketch keeping his lover Dolith in mind.

King Shajahan was very happy on seeing the sketch plan for a castle and awarded. Harin with gold and wealth. But Harin refused to accept in the absence of his valuable lover. He realised the be could not live long without Dilothi. He also drowned himself in Jamuna river as to be with his lover.

The world is aware of the affection of only Shajahan with Mumtaj, But in dark of th sacrificed loving partners who lost their lives for love.

**P.Duvaraga**
12 Science (2014)

# விஞ்ஞான உலகமிது

*விலங்கோடு விலங்காய் வாழ்ந்து*
*விண்ணைப் பார்த்து வியந்துநின்ற மனிதனை*
*விண்வெளியில் நின்று மண்ணைப்*
*பார்க்க வைத்தது விஞ்ஞான சாதனை!*

*இதயத்தை காணவில்லை இடமறிந்துதுடிக்கிறது - என*
*இங்கு கவி எழுதும் கணத்தில் சலனமே இல்லாமல்*
*இருதய மாற்று சிகிச்சை செய்துவிட்டு*
*சத்தமே இல்லாமல் சிரிக்கிறது சமகால விஞ்ஞானம்!*

*சிரிப்புக்களை சிறுப்பித்து பின் கொன்றுவிடும்*
*தொற்றுநோய்கள் பல உள்ளனவாம் ஆனால்*
*அம்புபட்டு இறக்கும் கொடிய மிருகம் போலின்று*
*ஊசி மருந்தால் இறந்தன நோய்கள்!*

*ஊனம் என்றும் காரணத்தால் அன்று*
*திருமண வாழ்வை மறந்த பெண்கள்*
*அழகாக்கும் மருந்துகளால் இன்று அவர்கள்*
*அகத்தின் அழகு முகத்திலே!*

*மாட்டு வண்டியாம் அன்று அசைந்து செல்ல*
*விமானங்களோ இன்று பறந்து செல்ல*
*கட்டுமரமோ! அது என்ன? என்ற இளைய தலைமுறை*
*கப்பல் இது எங்கள் பயணத்தோழன் என்றது!*

*சந்திரனில் காலடி வைத்த மனிதனுக்கு இன்று*
*செவ்வாயில் குடியேற எண்ணமாம்*
*சூரனை அழிக்க முருகன் வேல் எடுத்தான்*
*இவ்வுலகை மாற்ற மனிதன் விஞ்ஞானத்தைக் கண்டான்!*

*தோல்,சதை என்போடு உருவான மனித உடல்*
*ஒரு விந்தை மிக்கது என்றது மெஞ்ஞானம்*
*குளோனிங் முறையில் இரட்டையரை*
*உருவாக்கி சாதனை படைத்தது விஞ்ஞானம்!*

*சூரியனைத் தொட முயலும் பீனிக்ஸ் பறவை*
*இதைப்போல் எத்தனை எத்தனை சாதனைகள்*
*ஆனாலும் திருப்தி படுத்தவில்லையே - எங்கள்*
*சாதனைகள் என்கின்றனர் விஞ்ஞானிகள்!*

**ம.சோபனா**
12 விஞ்ஞானப்பிரிவு (2014)

# AN ANALYSIS OF AN ORGANIZATIONS ENVIRONMENT

An organazational analysis is an important concept. Because it helps to achieve maximum profit and also safe the consumer's rights. several factors are affecting both external and internal environments of an organization environment analysis in 2 ways: PEST & SWOT models

Analysis on Organizational Environment

PEST Model → SWOT model

## PEST Model

One useful way of anlyzing on organization's external enviornment is by grouping external forces. PEST stands for political Economics, Social and Technological influences, all of which are external factors carrying out a PEST analysis.

These factors are in a state of flun.

Political legal and fiscal environment

Social and cultural environment | The organization | Economic environment

## 1. Political Legal and fiscal factors.

All decisions of business are influenced by political , fiscal (toztation) and Legal decisions. There -fore many people have been encourged to become self employed or ownership.

The following criterias are considered:

* Political stability
* Government policies : trade policy ; fiscal policy ect.
* Privatisation
* Trade union
* Changes in the availability of raw materials.
* Duties and levies.
* Changes infrastructure
* Regulatory const raints such as labeing quality, safety.

## 2. Economic Factors

Economic environment is influenced by domestic economic polices which also depend upon world economic trends. This factors determine the nature of goods and services required by consumers as well as the aggregate supply.

The following criterias are considered.

- Employment opportunity
- Income distribution
- Saving , Investment and interest rate
- Inflation
- Price volatility
- Energy crisis

## 3. Social and cultural factors :

To understand the social and cultural environment involves a close analysis of society specially in the demographic changes as well as changes in cultural values and social structure.

- The followingn criterias are considered;
- Consumer life styles
- Demographics issues; population exploitation
- Education
- Immigration or emigration
- Religion
- Availability of natural resources

## 4. Technological Factors :

Technology is the factor for marketing goods and services which leads the organization to new material, reduce the cost of production and also create a positive supply in the market in order to complete their substitutions.

The following criterigs are considered;

- New technological processes
- Energy saving techniques
- New materials and substitutes for existing material
- Butter equipment
- Consumer preference

Forces external to the organization are rarely stable and many of these forces can alter quickly and dramatically. It is important to recognize that while some of these forces will be harmfull to marketing efforts, others will create new opportunities.

## SWOT Model

SWOT analysis sets out to focus upon the strength and weaknesses that are internal and opportunities and Threats that are external element. Both reveal the relation ship between the organization and its marketing environment.

A simple SWOT analysis might show following.

### 1. Strength

* Good product
* Good will
* Good management team
* Good relation ship between consumers

### 2. Weakness

* Less management and communication skills
* Regular cash -flow problems
* Small scale operation
* Deals in a limited market

### 3. Opportunities

* New and repidly growing markets
* Changing tastes of consumers
* goods diversity in to a number of product lines
* Availability of modern technology.

### 4. Threats

* Technological change
* Economic back wardness
* Development to foreign competitors
* The Government enact restrication, low and policies

SWOT analysis help to create a strategy inorder to build -up its strength , minimize its weakness increase the opportunity and cancel out or minimize the threats in on organization.

**B.Mathura**
12 com. (2014)

# தொலைவிலுள்ள நட்பு

முன்னைய சில கணப்பொழுதுகளில்
தேன் மதுர மொழி பேசும்
நண்பர்களின் பாசத்திற்கு மத்தியில் என் மனமும்
நிலவு அடிக்கடி எங்களிடம் வந்து போவதுண்டு
நானும் இணையும் ஆசையும்
எங்களிடம் பேச்சைக் கேட்பதற்காக
தினமும் தேடிவரும் தென்றல்
சுவர்தாண்டி வருவது மட்டுமல்லாது
எம் இதய வாசலையும் திறந்தேவிட்டு செல்வது வழக்கம்
பழைய கால நினைவுகளைப்
பசுமையாக சுவைத்துக் கொண்டிருக்கும் வேளை
சில்லென்று சிறுமாற்றம் என் உடலெங்கும்
போட்டியாக ஓடிவரும் கடலலைகள்
என் காலைத் தொட்டுவிட்டுப் போகின்றன
-முடிவுப் புள்ளியென நினைத்து
பாரச் சுமைகளை கடலிலே போட்டுவிட்டு நிமிர்ந்தபோதுதான்
ஓடியாடித் தெரிந்த முகில் கூட்டமெல்லாம் ஒன்று சேர்ந்து
எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கியிருப்பது தெரிந்தது.

வானம் மட்டும் வெறுமையாக
என் மனதைப் போல கவலையுடன்
அன்றைய கால நினைவுகளும் நிழல்களும்
இன்றும் நிஜமாக இருந்தாலும் - இன்று
உலகையே சுற்றித் திரியும் நிலவு
என் வீட்டுக் கூரையை தாண்டுவதேயில்லை
காற்று சுவர் தாண்டியே வருவதில்லை
இறுகப்பூட்டிய என் இதயவாசலை
எப்படி அது திறக்கும்........?
அதே இடம்............. அதே நிழல்................
அதே நிலவு ............ அதே தென்றல்.......
எல்லாமே அதே நிஜங்கள்........... ஆனாலும்
எல்லாமே சற்று தொலைவில் தான் எனக்கு
இரவின் நிசப்தம் மட்டும் பரவிக் கிடக்கிறது
நண்பர் மத்தியில் மட்டுமல்லாமல்
என் மனமெங்கும் தான்.

**ஜெ.ஜெயமதுஷா**
12 கலைப்பிரிவு 2014

# "FRIENDSHIP" - AS BOOKS

'A friend in need is a friend indeed' is one of the proverbs, we can often recall to our minds. No friends , we can find, but the libraries where we can get colmness and patience, while dipping into the books those are of several kinds, written by renowned saints, Scholars , seientists, Philosophers and Educationists. The Thirukkural, The Ethics, The Mahabaratham, The Ramayanam, The Bible, The Mahawamsam , The Guran and the othr books of assets are the real books to be read, and absorbed in our minds so as to develop our maturities in the faculties which must have wide strong look to varify good things and bad things for the betterment of our society - handicapped. The books , Magazines, Newspapers, and the journals we go through, make us all as the possessers of each and every things in our faculties of thoughts. They are the soul friends, and ossist us in the paths we take, and guide us to the paths to be selected for the supberb life styles and patterns during our life spans.

**J.Jeyasantha**
12 Arts "A"

**Past is a waste paper**
**Present is a News Paper**
**Future is a Question Paper**
**So, Read and Write care fully**
**Other wise,**
**Life will be a Tissue Paper.**

# போற்றப்பட வேண்டிய பெண்

அன்புக்கு வரைவிலக்கணம் பெண்மை
அறிவுக்கு புதிய ஒளி பெண்மை
தாய்மையின் சின்னம் பெண்ணியம்
தாலாட்டும் பூங்காற்று பெண்மனம்

வீரத்தில் சிறந்து நிற்பவள் பெண்ணவளே
வீரியமாய் முடிவெடுப்பதும் அவள் மனமே
மென்மை எனும் உள்ளம் தனில் புயலாய்
பூகம்பம் கொண்டு எழுபவளும் அவளே.

கனவுகளைக் கண்களிலே மறைத்து
கண்ணியமாய் வாழ்பவளும் பெண்ணே
தண்ணீரில் கரைந்த உப்புபோல கண்ணீராய்
உருகி எமை சுமந்தவளும் அன்னையே.

சகோதரியாய் எம்முடன் கைப்பிடித்த நட்பவளும் அவளே
சந்தோச வாழ்வின் சரிபாதியும் அவளே
குடும்பத்தின் குலவிளக்காய் மிளிர்ந்ததும் அவள்
தாங்கும் சுமைதீரவழி இல்லையே.

வாழ்வின் சுவாரஸியங்களை பகிர்ந்து கொள்ள
வாழ்விலே இணைந்த நண்பியும் பெண்ணவளே
பெண்ணவள் இல்லையெனில் நாம்வாழ்வது
மண்ணாகிப் போய்விடும்.

பெண்ணை தலைமேல் தாங்க வேண்டாம்
காலடியில் செருப்பாக மட்டும் நோக்கி விடாதீர்
ஏனெனில் இறைவனுக்கு மேலான
ஆன்மாவாக பெண்ணவள் இருப்பதனால்

பெண்ணோடு பிறந்தது பெண்ணோடு வாழ்ந்தது
அவள் மடிமீதே உயிர் துறக்கின்றோம்
தென்றல் வீசும் அவள் வாழ்வில்
புயல்வீசும்படி நடக்க வேண்டாம் ஆண்களே.

முழுநிலவாய் ஒளிரும் பெண்மையை வாழ்நாளின்
முழுமையாய் வளர்ப்பது நம் கடமை
தெய்வமாக பெண்ணை வைத்த உலகம் அவளை
பூஜைக்கேற்ற பூக்களாய் ஆராதிக்க வேண்டும்.

**ப. கீர்த்தனா**
12 கலைப்பிரிவு (2014)

# மழைநாள் நினைவுகள்

**பி**ரியா பாடசாலை முடிந்ததும் வீடு வந்து ஓய்வாகச் சிறிது நேரம் இருந்தாள். அவ்வேளை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. பிரியா வீட்டு யன்னல்களை மூடுவதற்காக யன்னலின் அருகில் சென்றாள். அப்போது அவளின் கண்களுக்குத் தேயிலைத் தோட்டம் தெரிந்தது. மழையும் இடைவிடாது பெய்து கொண்டு இருந்தது. அவளின் நினைவு கடந்த காலத்தை நோக்கி சிறகடித்து பறந்தது. பிரியாவின் குடும்பம் மிகவும் மகிழ்ச்சிகரமான குடும்பம். அவளிற்கு அன்பான அப்பா, அம்மா என்று மிகவும் அன்பான குடும்பத்தில் மிகவும் செல்லப் பிள்ளையாக பிரியா வாழ்ந்து வந்தாள். அன்று ஒருநாள் பிரியா பாடசாலைக்குச் சென்றிருந்தாள். தாயும், தந்தையும் வேலைக்காக தேயிலைத் தோட்டத்திற்கு சென்றிருந்தனர். பிரியா பாடசாலை விட்டு வரும் போது மழை பெய்து கொண்டு இருந்தது. அவள் மிகவும் வேகமாக வீடு வந்து சேர்ந்தாள். அவள் வீடு வந்ததும் அம்மா, அப்பா இருவரையும் தேடினாள். அவர்களைக் காணாது கோபத்துடன் அவளின் அறைக்கு சென்று யன்னல் கதவுகளைத் திறந்து விட்டு நின்றாள். எல்லோரும் கூடி நிற்பதைப் பார்த்துவிட்டு அவள் மிகவும் பயந்தவளாக தேயிலைத் தோட்டத்திற்கு ஓடினாள்.

அப்போது கடும்மழை பெய்து கொண்டு இருந்தது. அம்மழையில் அங்கு நின்ற கூட்டத்தை விலக்கிவிட்டுப் பார்க்கும்போது அவளது தாயின் மடியில் அவளது தந்தையார் பாம்பு கடித்து உயிர் அற்று படுத்திருந்தார். இதைக் கண்டதும் அவள் தாயை பற்றிப்பிடித்து அழுதாள்.

பின்பு வீட்டின் எல்லாப் பொறுப்புக்களும் அவளின் தாயாரில் திணிக்கப்பட்டது. பின்பு பிரியாவின் தாயான தங்கம்மா தேயிலை தோட்டத்தில் வேலைக்கு சென்று வீட்டு பொறுப்புக்களையும் ஏற்று பிரியாவையும் படிக்க வைத்தாள்.

சமுதாயத்தில் பல எதிர்ப்புக்களின் மத்தியிலும் தங்கம்மா பிரியாவைப் படிக்க வைத்தாள். பிரியாவும் பாடசாலைகளில் எல்லா மாணவர்களையும் பார்க்க நல்ல புள்ளிகள் எடுத்தாள். விளையாட்டிலும் திறமையுடையவளாக இருந்தாள். இதனால் பாடசாலை ஆசிரியர்கள் பிரியா மீது அதிக விருப்புக் கொண்டிருந்தனர்.

இவ்வாறாகப் பிரியாவிற்கு சாதரணதர பரீட்சையும் வந்தது. பிரியா மிகவும் ஆர்வமாக படித்து அப்பரீட்சையில் சித்தியடைந்தாள். பின்னர் அவள் கலைப்பிரிவில் கல்வி கற்றாள்.

சிலகாலம் கடந்ததும் பிரியாவின் அம்மாவிற்கு வயதாகி விட்டதால் பனியிலும், வெய்யிலிலும் வேலை செய்ததால் நோயாளியாக மாறிவிட்டாள். பிரியா தாயை வைத்தியசாலையில் சேர்த்தாள். இவ்வாறு தாயை பார்த்ததால் அவளால் உயர் கல்வியை தொடர முடியாத நிலமை ஏற்பட்டது. அப்போது இரண்டு நாட்கள் பாடசாலைக்கும் போகவில்லை. பிரியா பாடசாலைக்கு வராது விட்டதை அறிந்த சுகிர்தா என்கின்ற அவளது வகுப்பாசிரியர் அவளின் வீட்டிற்கு சென்றார்.

அவளின் வீட்டிற்குச் சென்று பிரியாவை பார்த்தார். பிரியா தன்னுடைய நிலமையை ஆசிரியரிடம் கூறினாள். அப்போது அவள் பிரியாவின் முதுகில் தடவி பிரியா நீ உனது கல்வியைத் தொடர நான் உதவி செய்கின்றேன், உனது அம்மாவின் வருத்தத்திற்கும் நான் உதவி செய்கின்றேன் என்று கூறினார். இதைக் கேட்டதும் மகிழ்ச்சியடைந்த பிரியா ஆசிரியருக்கு நன்றி கூறினார். பின்பு அவள் தனது படிப்பைத் தொடர்ந்தாள். ஒரிரு மாதங்கள் கழிந்ததும் அவளது தாயார் வருத்தத்தினால் இறந்து விட்டார். பிரியாவிற்கும் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. ஆனாலும் அவள் மனதைத் தளர விடவில்லை. தாயாரின் ஆசையான ஆசிரியர் தொழிலை தானும் செய்ய வேண்டும் என்று பல கவலைகளின் மத்தியில் படித்து க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானாள். அப்போது அவள் சுகிர்தா என்கின்ற ஆசிரியருக்கு கூறினாள். அவரும் அவளை வாழ்த்தி அனுப்பினார். பின்பு இரண்டு வருடங்களின் பின் அவள் ஒரு தமிழ்பாட ஆசிரியராகத் தெரிவானாள்.

தன் மகளை இப்படி ஒரு பதவியிலே பார்க்க ஆசைப்பட்ட தங்கம்மாவின் கனவு நனவானது. ஆனால் பிரியா இப் பதவியில் இருக்கும்போது பல கஸ்ரப்பட்டு படிக்க வைத்த தாய் இல்லாததை நினைத்து அழுதாள். அப்போது ரீச்சர் உள்ளே வரலாமா என்ற குரல் கேட்டு திரும்பினாள். மழையும் நின்றது பிரியாவும் சுயநினைவுக்கு வந்தாள்.

**க. அருட்செல்வி**
12 கலைப்பிரிவு (2014)

**முயன்றுதான் மேன்மை நிலை பெற வேண்டும்!**

பிறந்த குழந்தை மல்லாந்து கிடக்கின்றது
சிலநாளில் முயன்று குப்புறப்படுக்கின்றது
பின்னர் தவழ்கிறது. நிற்கிறது. தவழ்கிறது
பின்னர் பிடித்துக் கொண்டு நடக்கின்றது. தத்தி நடக்கிறது
பின்பு நேரே மெதுவாக தைரியமாக நடக்கிறது.

இப்படிப் படிப்படியாகத் தன்னுடைய முயற்சியில் முன்னேறுகின்றது. அதே போல் இறை வணக்கத்திலும் மற்ற எதிலும் ஒருவன் முயன்று முயன்று தான் மேலம் நிலைக்கு வர வேண்டும்.

[பாலி]

# பெண்கள் மீது ஏற்படுத்தும் வன்முறைகளை குறைப்பதில் எமது சமூகத்தின் பங்கு

உலக நாடுகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எதிர்க்கப்படுகின்ற அதேவேளை பெண்களுக்கெதிரான வன்முறைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இன்றைய உலகு பல்வேறு முன்னேற்றங்களையும் அபிவிருத்திகளையும் கண்டுவிட்டது என்று எல்லோரும் பெருமையுடன் கூறுகிறார்கள். ஆயினும் பாதிக்கப்படும் வர்க்கமாக பெண்கள் அதிகளவில் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறையானது அவர்களது மனித உரிமைகளின் பாரதூரமான மீறல்களில் ஒன்றாகும். இது உடல் ரீதியானதும் பாலியல் ரீதியானதும் உளவியல் ரீதியானதுமான கெடுதல் என்பதுமாகும். பெண்களுக்கெதிரான வன்முறை என்பது உலகளாவிய ஒரு குற்றமாக காணப்படுகின்றது. வீட்டு வன்முறை வன்புணர்ச்சி, பாலியல்தொல்லை, வேலைத்தளங்களில் ஏற்படும் துஷ்பிரயோகம் மற்றும் போர்களில் ஒரு ஆயுதமாக பாலியல் வன்முறை போன்ற பல ரூபங்களில் வெளிவருகின்றது. பெண்கள் மீதான அடக்கு முறைகள் காலத்துக்குக் காலம் வெவ்வேறு வடிவம் பெறுகின்றது. கடந்த சில தசாப்தங்களில் பெண்மீதான அடக்குமுறைகள் அவள் மீதான உடல் உளரீதியான வன்முறைகளாக மாற்றம் பெற்றுள்ளன. தாம் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றோம் என்பதை அறிந்திருந்தும் அதை எதிர்த்து குரல் எழுப்ப முடியாதவர்களாய் அனேக பெண்கள் இருக்கின்றார்கள். இதனால் அவர்கள் மீதான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரிப்பதற்குரிய காரணங்கள் பல வன்முறைகளைப் பெண்களே ஏற்றுக்கொள்ளப் பழக்கப்பட்டு விட்டார்கள். அதற்கு மேலாக ஆண்கள் பெண்களுக்கு வன்முறைகளை சாதாரணமாக செய்யலாம் என்ற ஒரு மனப்பாங்கை வளர்த்துக் கொண்டுள்ளார்கள். வன்முறைகளை ஏற்றுக்கொள்வதற்கு சமூகம் தொடர்ந்தும் அனுமதியினை வழங்கி வருகின்றது.

பாடசாலைகள், அலுவலகங்கள், மற்றும் பயணம்செய்யும் பேரூந்திலும் வீதியோரங்களிலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் தலை தூக்கி நிற்கின்றன. அதிகாரம் வாய்ந்த உயர் பீடங்களில் இருப்பவர்களாலும் பெண்கள் வன்முறைகளை எதிர்கொள்ளும் நிலை இலங்கையிலும் தொடர்கின்றது. இலங்கையில் காணப்படும் சட்டமும் சட்டத்தை சுற்றியுள்ள பட்டங்களும் வலுவானதாக இல்லாமையும் இதற்கு காரணமாக அமைந்துள்ளன. பெண்களுக்கு சமுதாயத்தில் ஓரளவு அங்கீகாரம் கிடைத்தாலும் அவர்கள் மீதான அடக்கு முறைகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இது வளர்ந்து வரும் சமுதாயத்தில் ஆண், பெண் இனப்பாகுபாட்டை அதிகரிக்குமே தவிர பெண்களுக்கு முறையான அந்தஸ்தை தராது. இலங்கையில் கூட 40% ஆன பெண்களில் பல பெண்கள் பல்வேறு வகையிலான துஷ்பிரயோகங்களுக்கும் வன்கொடுமைகளுக்கும் உள்ளாக்கப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. ஒரு சமூகத்தில் முதுகெலும்பாகப் பெண்களே உள்ளனர். எனவே பெண்கள் சமூகத்தில் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்களை தீர்க்க வேண்டிய பொறுப்பு எம்மவரிடத்தே உள்ளது.

பெண்கள் வன்முறைகளை சந்திக்கின்ற முக்கியமானதொரு இடமாக குடும்பம் காணப்படுகின்றது. வீட்டு வேலைகளில் கூடுதலான நேரம் ஈடுபடுபவர்களாயும் அத்தோடு

வருமானத்தை ஈட்டுவதிலும் பெண்கள் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு வீட்டு சுமைகளைத் தாங்கிக் கொள்ளும் பெண்களும் வீட்டு வேலைகளை சுமக்கும் பெண்களும் நாள்தோறும் ஏதோ ஒரு வகையில் வன்முறைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். அதேநேரம் சமூக ஒடுக்கு முறைகளுக்கும் கேலிக்கூத்துக்களுக்கும் உட்படுத்தப்படுகின்றார்கள். குடும்பங்களில் ஏற்படுகின்ற வன்முறைகளுக்கு ஆண்களின் (கணவனின்) குடிப்பழக்கமே காரணமாக அமைகின்றது. மதுபோதையில் இருக்கும் கணவருக்கு பெண்கள் பிரச்சினைகளை முன் வைக்கும் போது வன்முறைகள் வெடிக்கின்றன. மேலும் தொழில் செய்யும் இடங்களில் அதிகளவில் பெண்கள் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்படுவதும் தற்போது அதிகரித்து வருகின்றது. அத்தோடு சீதனக்கொடுமையாலும் அதிகளவு பெண்கள் நிர்க்கதியாக்கப் பட்டுள்ளனர்.

யுத்தங்களின் போதும் அதிகளவு பெண்கள் வன்முறைகளுக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள். யுத்தங்களினால் இடம் பெயர்ந்தவர்களில் பெண்களும் சிறுவர்களுமே அதிகளவு அடங்கியிருக்கின்றனர். இத்தகைய வன்முறைகளுக்கு காரணத்தை எடுத்து நோக்கினால் இதற்கு முக்கிய காரணம் எம்மைச் சுற்றியுள்ள சமூகமே ஆகும். பெண்கள் முகங்கொடுக்கின்ற ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் ஒவ்வொரு சமூக அமைப்புக்களும் காரணமாக அமைந்து விடுகின்றது. இவ்வாறான நிலையில் பெண்களது பிரச்சினைகளைத் தீர்ப்பது என்றால் யார் முன்னின்று செயற்பட வேண்டும்? எமது குடும்பம், சமூகம், குடும்பத்தலைவர்கள் முன்னின்று செயற்பட வேண்டும். இதற்கு வன்முறைகளையும் சமத்துவமின்மையையும் ஒழிக்க பெண்களும் முன்வரவேண்டும். இவ்வாறு முன் வருவதால் சமூகமும் பிரச்சினையில் இருந்து விடுபடமுடியும். பெண்களுக்கு சமூக விழிப்புணர்வானது இவ்வேளையில் அவசியமானதாகக் காணப்படுகின்றது. பெண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் போது சமூகத்தையும் ஒன்றிணைக்க வேண்டும். மேலும் சட்டவாக்கங்கள், சட்ட ரீதியான மாற்றங்கள், நியதிகளை பெண்களுக்கு விசேடமாக உருவாக்குவதற்கு சமூக பங்கு பற்றல் அவசியமானதாகும். சமூகத்தின் மத்தியில் பெண்களுக்கான அந்தஸ்தினை சமமாக மதிக்கும் மனப்பாங்கினை குடும்பத்திலிருந்தே உருவாக்க வேண்டும். ஒவ்வொருவரும் பெண்களினுடைய முக்கியத்துவத்தினை உணர வேண்டும். பெண்களுக்கு பாதுகாப்பு தரக்கூடிய சட்டமுறைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும். பெண்களுக்கு இருக்கும் உரிமைகள் மேலும் வலியுறுத்தப்படுதல் வேண்டும். இலங்கையில் கூட பெண்களின் அரசியல் பிரவேசம் குறைவானதாகவே உள்ளது. எனவே பெண்களின் அரசியல் பிரவேசத்தில் சமூகத்திற்கு நன்மைகள் இருப்பதை உணர்த்த வேண்டும். மேலும் பெண்களுக்கு வன் முறைகளை ஏற்படுத்துபவர்களை இனங்கண்டு பக்கச்சார்பின்றித் தகுந்த தண்டனைகள் அளிக்க வேண்டும்.

எந்தெந்த இடங்களில் பெண்களுக்கான வன்முறைகள் தலைதூக்கி நிற்கின்றதோ அந்த இடங்களில் அதனை தட்டிக் கேட்பதற்கு அனைத்து சமூகமும் ஒன்றிணைய வேண்டும். இதன் மூலம் ஒற்றுமையான ஒரு குடும்பம், சமூகம் என்பவற்றை கட்டியெழுப்ப முடிவதோடு பெண்களுக்கான அந்தஸ்தினையும் வழங்கமுடியும். “பெண்களே நாட்டின் கண்கள்” என்ற முதுமொழிக்கிணங்க அப் பெண்களை மதித்து சம அந்தஸ்தினை வழங்க அனைத்து சமூகமும் முன் வர வேண்டும்.

**சி. சிவதர்சினி**
12 கலைப்பிரிவு (2014)

# தொற்றாத நோய்கள்

* நீரிழிவு
* உயர்குருதி அமுக்கம்
* இதயநோய்
* மலச்சிக்கல்
* இரைப்பை அழற்சி

## 01. நீரிழிவு நோய்

குருதியில் வெல்ல மட்டம் அதிகரிப்பதால் ஏற்படும் நோய் நிலமை நீரிழிவு ஆகும். குருதியின் வெல்ல மட்டத்தைக் கட்டுப்படுத்தும் ஓமோன் இன்சுலின் ஓமோன் ஆகும். இன்சுலின் ஓமோன் சதையியிலுள்ள இலங்ககான் சிறுதீவுகள் மூலம் சுரக்கப்படுகின்றது. நீரிழிவு நோயானது முதன்நிலை நீரிழிவு, துணைநிலை நீரிழிவு என வகைப்படுகின்றது. பல்வேறு காரணங்களினால் அதிகளவில் காணப்படுகின்ற நீரிழிவு முதன்நிலை நீரிழிவு ஆகும். சதையியில் ஏற்படுகின்ற பாதிப்புக் காரணமாக குருதி வெல்ல மட்டம் அதிகரித்தல் துணைநிலை நீரிழிவு எனப்படும். நீரிழிவு நோயின் அறிகுறிகள் அதிகதாகம், அதிக சிறுநீர் கழித்தல், இரவில் சிறுநீர் கழிக்க வேண்டிய தேவை ஏற்படுதல், உண்டி விருப்பு அதிகரித்தல், நிறைகுறைதல், நீர்ப்பீடனம் குறைதல், புண்கள் ஆறுவது தாமதம் போன்றன.

நீரிழிவு நோயால் ஏற்படும் சிக்கல்கள், மூளை, கண்கள், இதயம், சிறுநீரகம், தோல், கால்கள் என்பன பாதிப்படைவதுடன் தீவிர நீரிழிவின் போது அமிலத் தன்மை காரணமாக மூர்ச்சத்தன்மை ஏற்பட்டு கிடோ அசிற்றோசிஸ் எனும் முழுமயக்கம் ஏற்படுகின்றது. இந்நோயைக் கண்டறிவதற்கு சிறுநீர்ப் பரிசோதனை குருதிச் சோதனை செய்தல் சிறந்தது. நீரிழிவு நோயாளி குருதிச் சோதனை செய்தல் சிறந்தது. நீரிழிவு நோயாளிகள். கவனம் செலுத்த வேண்டிய முக்கிய விடயங்கள்.

01. சீனி, கருப்பட்டி ஆகியவற்றைப் பயன்படுத்தக்கூடாது.
02. முட்டை மஞ்சள் கருவை நீக்கி வெண்கருவை எடுத்தல்.
03. கிறில் செய்யப்பட்ட உணவை தயாரித்தல்.
04. புழுங்கல் சிவப்பரிசியை தெரிவு செய்தல்.
05. சூப் வகைகள் வழங்குவது பொருத்தமானது.
06. இளநீர், குளிர்பானங்கள், இனிப்பூட்டிய பழங்களை உணவுடன் சேர்த்தல் கூடாது.

## 02. உயர் குருதி அமுக்கம்.

இந் நோய் உடையவர்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்.

01. எண்ணெய் தேவைப்படாத சமையல் முறையைக் கையாளுதல்.

02. எண்ணெய்யில் பொரிக்காமல் கனாடுப்பில் வேகவைத்தல்.

03. கோழி இறைச்சியின் தோலை நீக்குதல்.

04. எண்ணெய் வகைகள் பயன்படுத்தலாகாது.

05. உப்பையும் மிகக் குறைவாகச் சேர்த்தல்.

06. முழு ஆடைப்பால், முட்டைக்கரு உணவில் சேர்க்கக் கூடாது.

07. உணவு வேளைகளில் இலை மரக்கறிகளைச் சேர்த்தல்.

08. ஊறுகாய், சோஸ்வகைகள் உள்ளெடுத்தல் கூடாது.

## 03. இருதய நோய்.

01. தொற்றாத நோய்களில் ஒன்று இதுவாகும். இந்நோயால் பீடிக்கப்பட்டவர்கள் எண்ணெய் தேவைப்படாத சமையல் முறைகளைப் பயன்படுத்தல்.

02. கேக், பேஸ்ரி, ஏனைய பேக்கரி உற்பத்தியைத் தவிர்த்தல்.

03. கோழி இறைச்சியாயின் தோல் நீக்குதல் வேண்டும். உணவு சமைப்பதற்கு தண்ணிப் பாலைப் பயன்படுத்தல். எண்ணெய்யில் பொரிப்பதற்குப் பதிலாக கனலில் வேக வைத்துப் பயன்படுத்தல்.

## 04. மலச்சிக்கல்.

மலச்சிக்கல் நோய் உடையவர்கள் உணவு வகைகளில் மரக்கறி, பழவகைகளை உள்ளெடுத்தல் சிறந்தது. உணவு வேளையில் கோப்பி, கொக்கோ, சொக்லேட் ஆகியவற்றைத் தவிர்த்தல், திண்ம உணவை உட்கொள்ள முடியாத நோயாளிகளுக்காக அரைத்திண்ம அல்லது திரவ உணவுகளைத் தயாரித்தல் சிறந்தது. ஆகவே இந் நோய் நிலைமைகள் ஏற்படுமிடத்து எம்மை நாமே அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுதல் வேண்டும்.

**உ.லவீனா**
12 கலைப்பிரிவு (2014)

**ஆற்றல் பெற வேண்டுமா?**

முதலில்பொறாமையை ஒழியுங்கள்
சிரியுங்கள். சந்தோசத்தை பரப்புங்கள்
நன்றாக மனம் விட்டுச் சிரியுங்கள்
உங்களுடைய சிரிப்பில் உலகம் பங்கு
எடுத்து கொள்ளப்படும்.

[வில்காய்ஸ்மித்]

# அன்புள்ள தோழிக்கு........

எப்படி இருக்கிறாய்?
எங்கே இருக்கிறாய்?
எப்போது வருவாய்?
என் இதயம் துடிக்கும் போதெல்லாம்
உன்னைப் பற்றி எழும்
கேள்விகள் இவை.....

உன் விரலோடு விரல் கோர்த்து
விளையாடிய வீதிகள்
இன்று வெற்றிடமாய்
தெரிகின்றன.....

உன் எச்சில் மருந்தால்
ஆறிப் போன காயங்களின்
தழும்புகள்
இன்று வலியால் துடிக்கின்றன....

உன்னோடு தோல் சேர்ந்த
என் சுக துக்கங்கள் அனைத்தும்
இன்று தனிமையில்
தவிக்கின்றன.....

புன்னகை பூ பூத்து
நட்போடு நடைபோட்டோம்
புத்தி கெட்ட சமுதாயம் நம்மை
பிரிக்கு மென்றா
எதிர்பார்த்தோம்.....

அண்ணன் தங்கை வந்தாலே
அருவருப்பாக பார்க்கும்
சமுதாயம்
நண்பர்களாய் நடைபோடும்
நம்மை மட்டும்
ஆசையோடுவா
பார்க்கப் போகிறது....

சீணர்களின் சொல்லுக்கு
வெட்கப்பட்டு
விட்டில் பூச்சிபோல்
துடிக்க வேண்டாமென
வெவ்வேறு திசை பிரிந்தோம்
வேரருவாத நம் நட்போடு....

விவேகத்தோடு எடுத்த நம்
முடிவு
நட்பிற்கு நல்லது என்றாலும்
வெவ்வேறு வேளைகளில்
என்னை ரணமாய் கொள்கிறது.....

நீ எத்திசையில் இருந்தாலும்
நம் நட்பெனும் சுவாசக்காற்று
எப்போதும் எங்கோ ஓரிடத்தில்
சந்தித்து கொண்டுதான் இருக்கிறது...

கண்ணீர் வருமோ என்ற
தயக்கத்தில் தான்
இதை எழுத துடங்கினேன்
துடைக்க உன் விரல்
இல்லாத போது நான் மட்டும்
எப்படி
என் கண்ணீரை
வர மறுக்கிறது.....
உன் நினைவில் நான் எழுதும்
இந்த இனிய வேளையில்
என் நினைவில் நீயும்
இருப்பாய்
என்ற நம்பிக்கையோடு....
நம் நட்பெனும் காற்றை
சுவாசிக்கும் உன் அன்பு நண்பி....

**வே. இசைவாணி**
13 கலைப்பிரிவு (2014)

# Present Advanced Level Students

## 12 Arts 'A' (2014)

1. Ravichandran Rosiga
2. Pathmanathan Sinthusha
3. Arulanantham Anusiya
4. Thavarasa Thanushika
5. Jeganathan Jenitha
6. Kunaratnam Mayoorika
7. Kunaratnam Sarmini
8. Pakiyanathan Mythili
9. Mariyaneshan Rosanya
10. Yogarasa Logini
11. Somaskantharaja Vaitheki
12. Veluppillai Esaivani
13. Ratnasikamany Keerthika
14. Mahenthiran Karthika
15. Maiyalagan Aranya
16. Nagarasa Kvisika
17. Jeyakumar Mathusha
18. Kirushnarasa Kirusnamithusha
19. Rathnavel Saththiya
20. Paramanatharasa thadshajini
21. Alaharathinam Anusha
22. Sivajokanathan Sivatharsini
23. Jeyaveerasingam Jeyamathusha
24. Jeyaveerasingam Jeyasantha
25. Uthayakumr Sinthuruby
26. Makenthiran Kalaijarasi
27. Kanesh Arudselvi
28. Arunthavam Mithila
29. Thangarasa Malathi
30. Parameswaran Keerthana
31. Vettivel Jivitha
32. Navaygan Navatheepa
33. Kirushnanantham Kiruthiha

## 12 Arts B (2014)

01. Nanthakumaran Vithusa
02. Karunakaran Sangeetha
03. Sivaseelan Niranchini
04. Rajeswarn Kalaivani
05. Nagenthiran Thusika
06. Gunalingam Jeyatharani
07. Sivalingam Gowthami
08. Rajasekaran Gayathri
09. Uthayakumar Laveena
10. Vigneswaran Priyanga
11. Jeyanmohan Jegamalar
12. Jeyaraja Abivarna
13. Vetivelautham Sangeetha
14. Arunthavarasa Ajantha
15. Santhirakumar Kasthoory
16. Murugamoorthy Sathyathevi
17. Sinnathurai Sinthuja
18. Pathmanathan Losika
19. Jeyagobal Jeyaranjini
20. Alistangnamani Juginmary
21. Thevathiraviyam Annmary Niranch
22. Loganathan Kirushanthiny
23. Selvarasha Karththika
24. Mahalingam Mathusana
25. Tharmagulasingam Janani
26. Jesuraththinam Jesuniroh
27. Nadaraja Nalajini
28. Satgunaraja Sanjiga
29. Kirushnarajah Dilaxsana
30. Sriranchan Suganthana
31. Sakthivel Kalaivani

# 12 Commerce (2014)

1. Pathmanathan Piremiga
2. Yogendiran Subaitha
3. Annaligam Lavanya
4. Velummylum Yogamajilini
5. Nanthakumar Nishanthini
6. Rasaraththinam Nijanthy
7. Kiritharan Nithya
8. Balakrishnan Luxshana
9. Balasingam Mathura
10. Thayaparan Gowthamy
11. Raveenthiran Renuka
12. Paramsothy Kayathiri
13. Thavarajah Jeevitha
14. Thavalingam Krishni
15. Kugenthiran Mangalatharsiny
16. Jeyakumar Jethursha
17. Ratnasigamani Arthika
18. Mahenthiraraja Gayathri
19. Selvarajah Sutharsana
20. Selvakulasingam Selvanam
21. Shanmuganathan Viththiya
22. Arulpiragasam MaryJanany
23. Suvendran Suvarna
24. Thevarasa Nitharsiny
25. Satheeskumar Saraniya
26. Paramsothy Padsana
27. Krishnakanthan Suwasthika
28. Rasu Nivitha
29. Jeyakumar Nirupa
30. Vijamohan Vasugi
31. Ravithas Sanjika
32. Kirishnathan Nithiya
33. Jeganathan Thadshajini
34. Srirasa Kayathri

# 12 Bio & Maths (2014)

1. Mathange Balendran
2. Nivethiga Ganeshalingam
3. Sopana Majilvahanam
4. Thuvaraka Parameshwaran
5. Sivatharsika Sivalingam
6. Laksala Thurairasa
7. Luxsana Amalathas
8. Keethansana Kanesamoorthy
9. Sathursha Koneshwaran
10. Mayure Mahenthiran
11. Saruja Maheswaran
12. Kayani Masilamani
13. Nirusha Ninmathirasa
14. Vithura Ramachandran
15. Janisha Ravichandran
16. Praveena Satkunam
17. Kirushanthy Sritharan
18. Yalini Sundaram
19. Thakshayini Vakeesan
20. Yalini Yoganantharasa

# 13 Bio and Maths (2013)

1. Gobica Selvarajah
2. Nishana Raveendran
3. Jeevitha Rubertvinson
4. Kirishjajini Karunakaran
5. Gowsika Selvakrishnan
6. Tharsini Anantharajah
7. Senthuja Karunanithy
8. Mithulaine Vivekanandan
9. Priyacharls Ariyakumar
10. Sankeetha Umasangar
11. Piriyanka Arulanantham
12. Praveena Thangarajah
13. Mathuni Raveendran
14. Jeyadhaksha Sivananthaselvam
15. Darmica Gobalakumaran
16. Rammiya Narayanasamy
17. Sukeerthana Kumaraswamy
18. Ruby Hanusha Packiyarajan
19. Tharmika Sivasubramaniyam
20. Renuka Raveedran
21. Jeyapriya Jegatheeswaran
22. Tharminy Tharmalingam
23. Janusha Vigneswararajah
24. Senthusha Gnanaganesh
25. Keerthana Mahalingam
26. Thusitha Prameswaran
27. Keerthana Kavitharan
28. Mathisajini Kanesalingam
29. Sharuka Mylvakanam
30. Jeevitha Nadarajah

# 13 Commerce (2013)

1. Thevarajah Kishnameera
2. Thavalingam Abira
3. SIththanathakumar Niranchitha
4. Santhiralingam Bavani
5. Srikantha Sujeeva
6. Subramaniam Ambika
7. Velummylym Jenila
8. Balendran Banuppirya
9. Manivannan Mayoori
10. Sivakumar Abirami
11. Sivalingam Maadula
12. Selvakumar Mithursha
13. Jeyakumar Abisha
14. Ponrasa elavarasi
15. Vamadevan Jeyameera
16. Ganeswaran Sutharsini
17. Sakoyaraja Lavanya
18. Murukuppillai Archana
19. Sivalingam Piriyalini
20. Vijayarasa Anitha

# 13 Arts "A" (2013)

1. Keerthana Rathinam
2. Sivanshali Vijayakanthan
3. Jenaniya Naguleswaran
4. Piratheepa Srikanrasha
5. Abilagini Arumugam
6. Nivetha Kanesarasa
7. Mathanki Parneershelvam
8. Tharanya Prakathalvan
9. Jegasugirtiha Jegasothilingam
10. Nirosha Demit
11. Tharsha Kirusnamoorthy
12. Navakeetha Navarathnam
13. Abirami Vasanthakumar
14. Mallika Thangavel
15. Kalaiyarasi Kanesamoorthy
16. Poongothai Thiruchelvam
17. Pirashanthini Selvarasa
18. Gobika Kamaleswaran
19. Nivetha Sivanantham
20. Janani Marivasan
21. Tharsika Kaneswaran
22. Annluxsika Anton Senathyraja
23. Mugunthini Kathiramalai
24. Sumitha Anantharasa
25. Vinegika Arulanantham
26. Subaladsmy Sivakumar

# 13 Arts "B" (2013)

1. Viththiya Rangarajah
2. Jamili Umapathy
3. Samila Thankavel
4. Logitha Satkunalingam
5. Chanthirika Vigneswaranmoorthy
6. Vinotharani Ponnaiah
7. Nilogini Shanmuganathan
8. Gowthami Vakeesan
9. Pirasanthini Kirupakaran
10. Jotheswary Nanthagopal
11. Rajana Gobi
12. Sivatharsiny Sivanathan
13. Sugeetha Ramathas
14. SInthuja Uthayakumar
15. Jeyaline Jesuthas
16. Thuvaraga Thuraisingam
17. Sugirtha Theiventhiram
18. Thanujajiny Nakamuththan
19. Nirojana Jeyaratnaseelan
20. Tharsana Thangavelu
21. Kasthoory Anantharasa
22. Sansytha Thillayampalam
23. Kajana Kanesalingam
24. Mary Suvina Thevarajah
25. Saranya Syamalan
26. Mathanki Naguleswaran
27. Subaki Kaneshalingam
28. Jenany pathmanathan
29. Suthenthiny Kanapathipillai
30. Navathepa Navajukan
31. Vinotha Yoganathan
32. Jenani Arulpiragasam

# Tamil Medium G.C.E O/L Exam - 2011

| | | |
|---|---|---|
| 1. | Sivalingam Sivatharsika | 9A |
| 2. | Jeganathan Thadshajini | 8A B |
| 3. | Satkunam Piraveena | 7A 2B |
| 4. | Kanesamoorthy Keethansana | 7A 2B |
| 5. | Majilvahanam Sobana | 7A B S |
| 6. | Rasathurai Puspamathy | 7A B S |
| 7. | Rasaratnam Nijanthy | 6A 2B C |
| 8. | Ganesalingam Nivethika | 6A B 2C |
| 9. | Mahenthiraraja Gayathri | 6A B 2C |
| 10. | Rajeswaran Kalaivani | 5A 2B C S |
| 11. | Yoganantharaja Yalini | 5A B 3C |

## English Medium

| | | |
|---|---|---|
| 1. | Thayaparan Gowthamy | 5A 4B |

# G.C.E A/L Exam - 2012

## BIO

| | | |
|---|---|---|
| 1. | Selvarajah Tharsika | 3B |
| 2. | Sriranganathan Tharsika | 2B C |
| 3. | Jegatheesan Keerthan | C 2S |
| 4. | Kobalakumaran Denikka | C 2S |

## Maths

| | | |
|---|---|---|
| 1. | Mahenthirarajah Gowsiga | 3B |
| 2. | Thillainathan Sarubi | 2B C |
| 3. | Thiyakaraja Rajitha | 3C |
| 4. | Suvendran Suganya | C 2S |
| 5. | Rajenthiralingam Kajenthiny | C 2S |
| 6. | Thevakumar Gowsiga | C 2S |

## Commerce

| | | |
|---|---|---|
| 1. | Thevaraja Sathveeka | 2A B |
| 2. | Shanmuganathan Lavany | A 2B |
| 3. | Subaskanthar Kirusuba | A BC |
| 4. | Ragunathan Lavanya | A 2C |

## Arts

| | | |
|---|---|---|
| 1. | Francis Piramila Eliciny | 2A S |
| 2. | Kiritharan Nivetha | A 2B |
| 3. | Pathmanathan Saranya | A BC |
| 4. | Kumarakulasingam Nishanthiny | A 2C |
| 5. | Kanesh Srivarna | A 2C |
| 6. | Ariyaratnam Arani | 2B C |
| 7. | Senthilnesan Gowsiga | 2B C |
| 8. | Somalingam Nalini | 2B C |
| 9. | Jeyaraja Janany | 2B C |
| 10. | Nagenthiran Thurkka | 2B C |




**2013 Science**



**2013 Commerce**




2013 Arts 'A'




**2013 Arts 'B'**



2014 Bio & Maths




2014 Commerce



**2014 Arts 'A'**



2014 Arts 'B'



# நன்றியுரை



எமது பாடசாலையில் “இந்து விழிகள்” எனும் இதழ் எமது முயற்சியாக உயர்தர மாணவ மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இம்மலர் சிறந்த முறையில் வெளிவருவதற்கு உதவிய அனைத்து உள்ளங்களிற்கும் முதற்கண் எமது மன்றத்தின் சார்பில் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்கிய கல்விப் பெருந்தகைகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கல்லூரி அதிபர், உபஅதிபர், மன்றத்தலைவர், இதழாசிரியர், மலர்வெளியீட்டுக்குழுவினர், மன்ற உறுப்பினர்களுக்கும் இம்மலர் பொலிவுற திகழ உதவிய மன்றப் பொறுப்பாசிரியர்களுக்கும், இவ் இதழிற்கு அட்டைப்படத்தினை வடிவமைத்த எமது கல்லூரி கணினி கற்கை நிலைய ஆசிரியர்களிற்கும், ஆக்கங்களை வழங்கிய மாணவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றும் படப் பிரதிகளை எடுத்துதவிய அரவிந்த் ஸ்ரூடியோ படப்பிடிப் பாளருக்கும், இம்மலரைக் குறுகிய காலத்தில் அச்சிட்டுதவிய **S.P.M** ஓவ்செற் பிறின்ரேர்ஸ் நிறுவனத்தினருக்கும் இம்மலரை வெளியிடுவதற்கு உறுதுணையாக பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சு.சுவர்ணா**
மன்றச் செயலாளர்

